# தமிழ் எழுத்தமைப்பு

தாமாழ எழாததாமமபபா

ஆறாவது
உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1987
கோலாலம்பூர், மலேசியா

புலவர். த. கோடப்பிள்ளை,
எம்.ஏ., எம்.:. பில்., பி.எட்.

# தமிழ் எழுத்தமைப்பு

*1987 இல் மலேசியா, கோலாலம்பூரில் நடைபெற்ற*
*ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு*
*ஆய்வரங்கில் படிக்கப் பெற்ற*
*ஆராய்ச்சி நூல்*

ஆசிரியர் :
புலவர் **த. கோடப்பிள்ளை,**
எம். ஏ., எம். ஃபில்., பி. எட்.,
உதவித் தலைமையாசிரியர்,
தால்மியா மேனிலைப்பள்ளி,
**தால்மியாபுரம், கல்லக்குடி - 621 651**

வெளியீடு :
**கௌரி பதிப்பகம்**
6/194, பீரங்கிமேடு
பிச்சாண்டார்கோவில் – 621 216
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

© த. கோடப்பிள்ளை


| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | நவம்பர்த்திங்கள், 1990. |
| நூல்தலைப்பு | : | தமிழ் எழுத்தமைப்பு |
| நூல் வகை | : | உரைநடை |
| ஆசிரியர் | : | த. கோடப்பிள்ளை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டாண்டு | : | 1990 |
| உரிமை | : | ஆசிரியர் |
| தாள் | : | 10·9 கி. கி. |
| நூல் அளவு | : | $18\frac{1}{2} \times 12\frac{1}{2}$ செ. மீ. ($\frac{1}{8}$ கிரௌன்) |
| பக்கங்கள் | : | 60 + 10 = 70 |
| படிகள் | ; | 1000 |
| அச்சகம் | : | ஜோதி பிரிண்டர்ஸ்<br>31, சின்னக்கடைத்தெரு<br>திருச்சிராப்பள்ளி – 620 002 |
| விலை | : | உருபாய் **10–00** |

---

| | | |
|---|---|---|
| பதிப்பகம் | : | கௌரி பதிப்பகம்<br>6/194, பீரங்கிமேடு<br>பிச்சாண்டர்கோவில் – 621 216<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |

## அன்பளிப்பு

தமிழ்மொழி எழுத்துச்
சீர்திருத்தத்தில் அக்கறைகொண்ட
என் முன்னோடிகளுக்கு இந்நூல்
திருவடி மலர்.

த. கோடப்பிள்ளை

# உள்ளுறை


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | |
| 2. | அணிந்துரை | |
| 3. | இன்றியமையாத ஒன்று | ... 1 |
| 4. | எழுத்துச் சீர்திருத்தம் | ... 2 |
| 5. | ஏன் எழுத்துச் சீர்திருத்தம் ? | ... 5 |
| 6. | இன்றும் குறைகள் | ... 17 |
| 7. | எழுத்துகள் அமையும் வகை | ... 22 |
| 8. | எழுத்துக் கோட்பாடு | ... 24 |
| 9. | தமிழ் எழுத்து அமைப்பு | ... 25 |
| 10. | பரிந்துரைகளும், நிறைகுறைகளும் | ... 26 |
| 11. | உயிர்கள் வரிவடிவத் திருத்தம் | ... 35 |
| 12. | ஆய்த எழுத்து | ... 35 |
| 13. | மெய் எழுத்து | ... 36 |
| 14. | உயிர்க் குறியீடுகள் | ... 36 |
| 15. | பழமையும் புதுமையும் | ... 38 |
| 16. | புதிய தமிழ் எழுத்துகள் – கூடுதல் | ... 41 |
| 17. | நடைமுறைத் திட்டம் | ... 42 |
| 18. | திருந்திய எழுத்துகளை நடைமுறைப்படுத்தல் | ... 63 |
| 19. | இன்னொன்று | ... 43 |
| 20. | ஏற்க வேண்டல் | ... 44 |
| 21. | அடிக்குறிப்புகள் | ... 45 |
| 22. | துணை நின்றவை | ... 49 |
| 23. | காலந்தொறும் தமிழ் எழுத்துகள் வளர்ச்சி | ... 51, 52 |
| 24. | பிற்சேர்க்கை | |
| | எகர ஒகர வரிவடிவ வளர்ச்சி | ... 53 |
| | உகர ஊகாரத் திருத்தம் | ... 57 |
| | ஒரு பதிப்பாசிரியர் தரும் செய்தி | ... 59 |

ஆய்வரங்கில் ஆசிரியர் ;  தலைவர் : வ. சுப. மாணிக்கம்.



# முன்னுரை

மொழி காலந்தொறும் வளர்கின்றது. இது இயற்கை. தமிழ் மொழிக்கும் இது பொருந்தும். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ்மொழி இன்றும் கன்னித் தமிழாய்ப் போற்றப் பெறுகின்றது.

நீண்ட நெடுநாட்களாக வாய்மொழியாகப் பேசப்பெற்று, இலக்கியமும் வாய்மொழியாக வளர்க்கப் பெற்று வளர்ந்தது தமிழ். மொழி நாகரிகம் வளரவளர, எழுத்தும் தோன்றியது. ஓரிடத்தில் ஒருவரால் தோற்றுவிக்கப் பெற்றது பலவீடத்தும் பலரிடத்தும் பரவிச் செப்புமுற பன்னூறாயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கும். பட்டையிலோ மடலிலோ ஓலையிலோ எழுத எழுதத் திருத்தம் பெற்று வந்த தமிழ் எழுத்துகள், களி மண்ணிலோ, பானையிலோ, சுவரிலோ, கல்லிலோ, நாணயத்திலோ, ஓலையிலோ எழுதப்பெற்று நிலைபெற்றது. பயிற்சி பெறப் பெறக் கைவாகுக்கேற்ப, கருவிகளுக்கேற்ப எழுத்து வடிவம் மாறிமாறி வளர்ந்தது. கல்மேல் எழுத்தும் காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் மாறி மாறி உருத்திரிந்தது!

அறிவியல் வளர்ச்சி காரணமாக, அச்சு எழுத்துகள் தோன்றியதால் வடிவம் நிலைகொண்டது. எனினும் அப்போதும் வெவ்வேறு விதமாக அச்சிடப் பெற்றது. காலச் சுழற்சியால் நிலைபெற்றதாயினும், குறையோடே தமிழ் எழுத்துகள் பயன்படுத்தப் பெறுகின்றன!

எழுத்துகள், பயிலத் தொடங்கும் சிறார்க்கு எழுத எளிமையாகவும் விரைவாகவும் சீர்மையாகவும் தோற்றப் பொலிவாகவும் அமையவேண்டும். ஒலியைக் கேட்டவுடன், நினைத்தவுடன் உருவம் எளிதாக விரைவாக மனதில் தோன்றுதல் வேண்டும். மனமுயற்சி, உடல் முயற்சி இரண்டுக்கும் தெளிவாகப் பயன்தருதல் வேண்டும். தகவல் தொடர்புக் கருவிகளுக்கும் பொருந்த அமையவேண்டும். இப்போது பயன்படும் தமிழ் எழுத்துகள் மேற்சொன்ன நோக்கங்களை நிறைவேற்றும் நிலையில் இல்லை.

முன்னோர் கொண்ட மரபுக்கு மாறாகத் திருத்த முயல் கிறார்களே என வருந்திப் பயனில்லை. மனிதனே மொழியைப் படைத்துக்கொண்டான். கருவியாகப் பயன்படுத்துகிறான். தேவைக்கேற்பக் கருவியைத் திருத்தி, முயற்சியைக் குறைத்து, பயனைப் பெருக்கிக் கொள்வதே அவனின் நோக்கமாக வேண்டும். ஆகவே தமிழ் எழுத்துளைத் திருத்திப் பயன் படுத்தலே நன்று.

ஒன்றைக் காண்போம். தமிழ் எழுத்துகளில் புள்ளியிடும் முறை இருந்திருக்கின்றது; இருக்கின்றது. மெய், உயிர், சார்பெழுத்துகளில் புள்ளியிடப் பெற்றது. ஓரெழுத்து இரண்டு புள்ளியும் இடப்பெற்றது. குற்றியல் இகரத்துக்கு முப்புள்ளி யும் கொடுக்கப் பெற்றிருக்கிறது. கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்குப்பின் கல்வெட்டுகளில் புள்ளியில்லை. ஓலைச் சுவடியில் முன்பு இல்லாதிருந்தது. அண்மைக் காலத்தில் புள்ளியும் இடப்பெற்றிருந்திருக்கின்றது !

எழுத்தின் மேல், கீழ், உள், பக்கவாட்டில் எங்கும் புள்ளி இடப்பெற்றிருக்கின்றது. காலப்போக்கில் புள்ளிகள் குறைந்து வேறு வேறு உருவங்கள் தோன்றியிருக்கின்றன.

மெய்யெழுத்து உயிர் ஏறும்போது இரண்டாம் வடிவ மாகிய புள்ளி நீங்குகிறது. உயிர்மெய்யில் மெய்யின் அடிப் படை வடிவத்தோடு உயிர்க்குறியீடு ஒட்டினாலும் வடிவில் இரண்டு வடிவம் எனவே கொள்ளல்வேண்டும். அற்றாகத் 'தமிழ் எழுத்தமைப்பு' என்னும் இந்நூல் எழுத்துகள் காலந் தொறும் மாறுபட்டு வளர்ந்த தன்மையை ஆய்ந்து, இனியும் மாற்றியமைக்கப்படுதலால் கேடில்லை; நன்மையே மிகுதி எனத் தெளிவுறுத்துகின்றது. பழையன கழித்துப் புதியன புகுத்துகின்றது. புதிய எழுத்து வடிவங்களைத் தருகின்றது. எளிமைப்படுத்துகின்றது; சீர்மை காண்கின்றது ; தெளிவு தருகின்றது ; பொலிவு கொடுக்கின்றது. எண்ணிக்கையையும் குறைக்கின்றது.

ஒரொலிக்கு ஒரு வடிவம் என்னும் கொள்கையில் அகர மேறிய உயிர்மெய்க்கும் ஓர் உயிர்க்குறியீடு கொடுக்கப் பெறு

கின்றது. அதனால் எண்ணிக்கை கூடாதோ எனின், கூடாது. 'தமிழ் எழுத்தமைப்பு' என்னும் தலைப்புக்குள்ள வடிவங்கள் பழையன 14 ஆகும். புதியன 16 ஆகின்றன. இரண்டு கூடுகின்றன. இச் சொற்றொடரில் அ முதல் ஐ வரையுள்ள உயிர் ஏறிய் உயிர்மெய்களே இருக்கின்றன. ஒ, ஓ, ஔ ஏறிய உயிர்மெய் வடிவங்களைப் பயன்படுத்தும்போது எண்ணிக்கை குறைந்துவிடுகின்றது.

'நாளையோ என்றோ சௌசௌ கொள்வோம்'

இவ்வெடுத்துக்காட்டில் பழைய எழுத்துள் 26 இருக் கின்றன! புதிய எழுத்துகள் இருபதே. ஆறு வடிவங்கள் குறை கின்றன. ஆகவே மொத்தத்தில் கூடுதல் இராது. ஆகவே எழுத்துச் சீர்திருத்தத்தால் இடம் வீணாகாது. காலம் மிகை யாகாது. குழப்பமேற்படாது. மாறாக எழுதக் கற்பதற்கு எளிமையாகும். விரைவு கிடைக்கும். சீர்மையாகும். முயற்சி குறையும். இடம் குறையும். குறையாவிடினும் இப்போதிருக் கும் இடமே செலவாகும்.

'புதிய எழுத்துகளால் பழைய இலக்கிய இலக்கணங்களை இழக்க வேண்டியிருக்குமே, என்பார் கூற்றும் பொருந்துவ தன்று. முந்திய வடிவங்கள் மாறமாற முந்திய நூல்கள் அழியாது மீண்டும் மீண்டும் புதிய வடிவங்களில் எழுதப் பெற்றுதானே கற்கப் பெற்றன !

ஆகையால் இனிவரும் இளைய தலைமுறையினர்க்கு எளிமையாகக் கற்க வழிகாட்டித் தமிழைத் தழைத்தோங்க நாம் வழிவிடுவோமாக.

இந்நூல் ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படிக்கப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரையாகும். அந்த ஆராய்ச்சிக் கருத்தரங்குக்கு முனைவர் வ. சுப. மாணிக்கம் தலைவராகவும் திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் இணைத்தலைவராகவும் அமர்ந்து சிறப்பித்தார்கள். உடன்பட்டும் உடன்படாமலு மாகக் கருத்துமோதல்கள் நிகழ்ந்தன. தமிழறிவு மிக்கவரும் எழுத்துச் சீர்திருத்த ஆர்வலருமாகப் பலர் நிறைந்திருந்து விவாதித்தனர்.

மறுநாள், மலேசியா தமிழ் நாளிதழ்கள் ''வ. சுப. மாணிக்கம் அவர்களும் சில திருத்தங்களுடன் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டார்,'' எனச் செய்தி வெளி யிட்டன.

அக்கட்டுரையே இங்கு விரிவுப்படுத்தி எழுதப் பெற்றது. அங்குக் காண்பிக்கப் பெற்ற புதிய வடிவங்களில் சில மாற்றித் தரப்பெற்றுள்ளன. விளக்கங்களும் சான்றுகளும் கூட்டப் பெற்றுள்ளன. ஏன், நூல் அச்சேறி முடியும் வரையும் கருத்துகள் சேர்க்கப் பெற்றன.

இந்நூலுக்குத் தமிழறிஞரும் தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவருமாகிய பேராசிரியர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் அன்புடன் அணிந்துரை அளித்துள்ளார்கள். அன்னாரது அன்பினையும் தொண்டினையும் என்றும் மறவேன். பாராட்டுரை எழுதி விடுத்திருக்கும் அம்மையார் கே. சரளாதேவி அவர்களுக்கும் எம் உளம் நிறை நன்றி. நூல் அச்சேறிய பின்பு 'உகர ஊகாரத் திருத்தம்' விடுத்து உதவி னார் புலவர் இராசு அவர்கள். அவர் கருத்துச் சுருக்கம் பிற்சேர்க்கையில் உள்ளது. அவர்கட்கும் எம் நன்றி.

திருச்சிராப்பள்ளி, ஜோதி அச்சகத்தார் அச்சேற்றி நன்னூலாக ஆக்கித் தந்துள்ளார். பாராட்டற்பாலது. தமிழ் மக்கள் இந்நூலைக் கைக்கொண்டு தமிழ் வளரத் துணை புரிவாராக.

அன்பன்,

த. கோடப்பிள்ளை

11—10—90.

# அணிந்துரை

(முனைவர் மு. தமிழ்க்குடிமகன், சட்டப் பேரவைத் தலைவர்)

புலவர் கோடப்பிள்ளை ஒரு மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றினாலும் ஆய்வு நிலையில் ஒரு கல்லூரியின் எம். ஃபில். ஆய்வாளரைவிட, ஒரு கல்லூரிப் பேராசிரியருக்குச் சமமாக ஆய்வு செய்யும் திறனைப் பெற்றுள்ளார்.

அதுவும் மொழியியல் தொடர்பான ஆய்வுகளை எல்லாரும் செய்துவிட முடியாது. இத்தகைய நிலையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டு நுட்பமாக ஆய்வது கடினமான வேலைதான். எனினும் தரமாகவும், திறமாகவும் அமைந்த இந்த ஆய்வுக்காக நூலாசிரியரைப் பாராட்டலாம்.

இவருக்கு இரண்டு பொறுப்புகள்: ஒன்று, தமிழில் எழுத்துச் சீர்திருத்தமே கூடாது என்று உறுதியுடன் நிற்பவர்களின் கருத்துகளை மறுப்பது. இதில் இவர் முழுமையான மறுப்புகளைக் கொடுத்துவிடவில்லை என்றே சொல்லலாம். ஆனால் இரண்டாவது பொறுப்பாகிய எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவையை மிக நன்றாக வலியுறுத்தியுள்ளார்.

பெரியார் தந்த சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டதால் ஏழு வரிவடிவங்கள் குறைந்துள்ளமையை வழிகாட்டியாகக் கொள்கிறார். அச்செழுத்து வந்த பிறகு அமைந்த வடிவங்கள் மாற்றமின்றித் திகழ்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறார்.

கல்வெட்டுக் காலம், வீரமாமுனிவர் காலம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களைச் சிறப்புறச் சுட்டுகிறார். இவரது ஆய்வில் சிறப்பு, எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பாக எழுதப்பட்ட அனைவரது நூல்களையும் படித்து அவர்தம் கருத்துகளோடு ஒப்ப வைத்துத் தன் கருத்தைக் கூறுவதாகும்.

மேலும், பிறர் தந்த சீர்திருத்தக் கருத்துகளையெல்லாம் தொகுத்து அவற்றில் தம்மால் உடன்பட முடியாதவற்றை வரிசைப்படுத்தி உரைப்பது சிறப்பாக உள்ளது.

அதன்பின் தன் கருத்துகளைக் கூறுகிறார். புதிய துணைக் குறியீடுகளை அறிமுகப்படுத்துகிறார். அதன்படி

| | | |
|---|---|---|
| உயிர் | — | 12 |
| மெய் | — | 18 |
| உயிர்க்குறியீடு | — | 12 |
| ஆய்தம் | — | 1 |
| | | 43 |

என்று 43 வரிவங்கள் மட்டுமே போதும் என்கிறார்.

நடைமுறைத் திட்டமும் தருகிறார்.

சிறிய நூலாயிருந்தாலும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படைக்கப்பட்ட கட்டுரை எனும் முறையில் செறிவும் தரமும் கொண்டிருப்பதால் பாராட்டியே தீரவேண்டும்.

ஆனால் பலரும் அறிமுகப்படுத்தும் வரிவடிவங்களையெல்லாம் பார்க்கும்போது ஒரு மயக்கம் வருகிறது.

' தமிழ் எழுத்தமைப்பு ' என்று பார்த்துப் பழக்கப்பட்டு விட்ட என் கண்களுக்கு [புதிய எழுத்துகளில் 'தமிழ் எழுத்தமைப்பு'] என்று பார்க்கும்போது மயக்கம் ஏற்படத்தான் செய்கிறது. 11 வரிவடிவங்களை எழுதிப் பழக்கப்பட்டுவிட்ட கைக்கு 16 வரிவடிவங்களை எழுதவேண்டிய தேவை ஏற்படுகிறது என்பதை மனத்திற் கொள்ளவேண்டும்.

'சித்திரமும் கைப்பழக்கம்' எனும் தொடரையும் மனத்திற் கொள்ளவேண்டும். ஏற்கனவே உள்ள நெடுங்கணக்கைப் பயின்று விரைந்து எழுதுவது கடினமா? இப்போது அறிமுகம் ஆகும் வரி வடிவங்களை இணைத்து விரைந்து எழுத முடியுமா என்பனவெல்லாம் ஆய்ந்து முடிவு செய்யப்பட வேண்டியவை.

எனினும் அன்பர் கோடப்பிள்ளை எடுத்துக்கொண்ட தலைப்பில் உருப்படியான உழைப்பை முதலீடு செய்து அந்த அணிக்குத் தரமான கருவியைப் படைத்தளித்துள்ளார்.

பாராட்டுகிறேன்.

# தமிழ் எழுத்தமைப்பு

## இன்றியமையாத ஒன்று :

அறிவு வளர்ச்சியினை விரிவுப்படுத்தவும் பதிவுசெய்து வைக்கவும் பிறர்க்குத் தெரிவிக்கவும் மொழி இன்றியமை யாதது.

அம்மொழியில் அமைந்த எழுத்துகளை எளிமையும் அழகும் விரைவும் சீர்மையும் உடையனவாக வளர்த்தல் அம் மொழிக்குரியார் கடமையாகும். அவ்வளர்ச்சி தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிக்கும் என்பதில் ஐயமின்று.

தமிழ்எழுத்து ஒலிப்புமுறை வியத்தகு முறையில் அறிவியல் நோக்கோடு நன்கு ஆராயப்பட்டுள்ளது. ஒலிப்பு நீட்சியின் கால அளவை மாத்திரையாக அளவிட்டு, ஒன்று இரண்டு மாத்திரை எழுத்துகள் எனக் கொண்டதோடன்றி, அரை, கால் மாத்திரை அளவாகவும் அளந்து நுணுக்கமாக ஆராய்ந் துள்ளனர். தொல்காப்பியர்முதல் தமிழ் நூலார் எல்லாருமே ஒலிவடிவுக்கு ஒரே தகுதியைக் கொடுத்துள்ளனர். ஆயினும்

'' கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற் கிடும்உரு பாம்வடி வெழுத்தே ''[1]

ஆகிய வரிவடிவில் மட்டும் மாறுபட்டுள்ளனர். தொல்காப்பியர் சொல்லிய வரிவடிவுக்கும் இக்காலத்தில் நாம் பயன்படுத்தும் வரிவடிவுக்கும் பெரிதும் வேறுபாடு உள்ளது. கல்வெட்டு வரிவடி வங்களும் வேறுபட்டுள்ளன. ஓலையில் எழுத்தாணிகொண்டு எழுதப்பெற்றதால் வடிவம் வேறுபட்டிருந்திருக்கின்றது.[2]

ஒலிவடிவம் மாறாதிருக்க, வரிவடிவம் மாறி வந்திருக் கின்றது. இது காலத்துக்கொப்பானதே. வரிவடிவில் பழையன

கழித்துப் புதியன புகுத்திக்கொள்ளல் வேண்டற்பாலதே. ஆகையால் எழுத்துச் சீர்திருத்தம் இன்றியமையாததாகின்றது. பெரியார் முறையை நடைமுறைப்படுத்திய நிலையையும் கொண்டே இங்கு ஆராயப்படுகின்றது.

### எழுத்துச் சீர்திருத்தம் :

எழுத்துகளின் எண்ணிக்கையைக் கூடியவரை குறைக்க வழி காண்பதே 'எழுத்துச் சீர்திருத்தம்' என்பர் பேனா ஓட்டி.[3] இதனோடு எழுத எளிமை, குறைந்த உளமுயற்சி உடல் முயற்சிகளால் விரைவாக எழுத வாய்ப்பு, தோற்றப் பொலிவு ஆகியனவும் கொள்ளுதற்கேற்ப அமைவதே எழுத்துச் சீர் திருத்தம் ஆகும்.

கல்வியியல், சமுதாயவியல், மொழியியல், தொழில் நுட்ப வியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் பொருத்தமான வரி வடிவம் அமைத்துக் கொள்ளுதலும் எழுத்துச் சீர்திருத்தம்.

''சீர்திருத்தம் என்பது அமைப்பில் எளிமையும் தெளிவும் ஏற்படுத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதே''[4] என்பர் டாக்டர் செ. வை. சண்முகம்.

சில அறிஞர் ல, ள, ழ ஒலிகளை ல என்னும் ஓரொலி யாகவும் ந, ன, ண ஒலிகளை ன என்னும் ஓரொலியாகவும் கொண்டு ஒலிக்கலாம்; அதனால் எழுத்தெண்ணிக்கை குறையு மெனக் கருத்து வெளிப்படுத்தியுள்ளனர். எழுத்தொலியியல் பற்றி அறிஞர் மு. வ. ''குறில் நெடில் வேறுபாடுகளும், ல—ள; ன—ண முதலான வேறுபாடுகளும் மற்ற மொழிகளில் சிறுபான்மை என்றோ, இல்லை என்றோ கூறலாம். ஆனால், தமிழ்மொழியில் அந்த வேறுபாடுகள் இன்றியமையாதன; மொழிக்கு அடிப்படையானவை. இந்த வேறுபாட்டை நீக்கி னால் பல்—பால், கல்—கால், கொல்—கோள், நான்—நாண் முதலிய சொற்கள் பல பொருளிழந்து போவதைக் காணலாம். இவ்வாறு தமிழின் ஒலியியல் பலவகைச் சிறப்பியல்புகளோடு விளங்குகின்றன''[5] எனக் குறிப்பிடுகின்றார். ஆகவே தமிழ்

ஒலியியலில் தலையிட்டு ஒலிகளைக் குறைத்து எழுத் தெண்ணிக்கையைக் குறைக்கலாமென்பது பயனில் முயற்சி என்க.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு எடுக்கவேண்டிய எத்தனையோ முயற்சிகளுள் எழுத்துகளைச் சீர்திருத்தவேண்டிய ஒரு முயற்சியும் இன்றியமையாதது.

'' மக்கள் வாழ்வில் ஏற்படும் எத்தனையோ சிக்கல்களைப் போக்க வழி காண்பதை விட்டு, எழுத்துச் சீர்திருத்தத்தில் கவனமா?'' என்பாரும் எண்ணிடல் வேண்டும். மொழி மனித வாழ்வுக்கு இன்றியமையாத ஒரு கருவி. அதனைச் செப்ப மிட்டுப் பயன்படுத்துவதே மனிதனின் திறமையாகும்.

'தமிழ் எழுத்துகளைத் திருத்தி அமைப்பதைவிட்டு உலகின் பல மொழியினரும் கொண்டுவிட்ட உரோமன் எழுத்துகளையே தமிழ்க்கும் கொள்ளலாமே' என்பாரும் உளர். தமிழ் வரலாறு காணமுடியாத பழங்காலத்திலிருந்தே இலக்கிய இலக்கண வளம்பெற்று இன்றும் வளரும் கன்னித் தமிழாக இருப்ப தாலும், இத்துணைச் சிறப்புடைய மொழிக்குத் தனி எழுத்து வடிவம் இல்லையா என்னும் இகழ்ச்சி வினா எழும்புதல் தகாது என்பதாலும், தமிழ்மொழி தமிழர் எல்லாரது உணர் வோடும் ஒன்றிவிட்டமையால் தனி எழுத்து வடிவமே வேண்டும் என்பதே பெருமையுடையதாகையாலும் அவர்தம் கூற்று பொருந்தாது என்க.

தமிழ் மொழியைக் கற்கும் தமிழ்ச் சிறார்க்கும் தம்மொழி யறிந்த பிறமொழியினர்க்கும் தமிழை எழுதப் பயிலும்போது இப்போதுள்ள வரிவடிவங்கள் குழப்பத்தையே உண்டாக்கு கின்றன. இன்றைய தமிழ் மாணாக்கர் எழுதுவதில் பிழை படுவதெல்லாம் தமிழ் எழுத்துச் சீர்மை இல்லாமையாலேயே. மேலும் மாணவர் இளமைப் பருவத்தில் தமிழ் எழுத்துகளை எழுதிக் கற்கப் பெருமுயற்சி எடுத்துக் கொள்வதோடு, நீண்ட காலத்தையும் வீணடிக்கின்றனர். எடுத்துக்காட்டாக இகர, ஐகார, ஒகர, ஓகார, ஔகாரங்களை எழுதிப் பழகப் படும்பாடு

பெரும்பாடு. இவ்வரிவடிவங்களை உள்ளத்தில் நினைவு கொண்டு, எழுதி எழுதிப் பயிற்சிபெற எவ்வளவு இடர்ப்பாடு கொள்கின்றனர்! பெரியோர்களாகிய நம்மில் சிலரும் இடர்ப் படுவதைக் காண்கிறோம். ஆகையால் கல்வி நோக்கில், தமிழ் எழுத்துகள் எழுத எளிமை இல்லாதனவாய் அமைந் துள்ளன என்பதை அறிதல் வேண்டும்.

மேலும், ஒலிக்கும்போது ஔ என்பது 'ஒ' 'ள' என்றும் கௌ என்பது 'கெ' 'ள' என்றும் பிழைபடச் சிறார் ஒலிக்கவும் வாய்ப்பாக அமைந்துள்ளன.

'' சிறுவர்கள் பூ, செடி போன்ற படங்களை மிக நுணுக்க மாகவும் வரைந்து விடுகின்றனரே, அவ்வாறிருக்க இந்த எழுத்துகளை எழுத அவர்க்குப் பெருந்தொல்லையா?'' என்றும் சிலர் வினவுகிறார்கள்.

ஒரு கலையைக் கற்பவர்க்கு மற்ற கலைகளும் எளிதாக அமையும் என்பது பொருந்தாது என்பதாலும் பல அறிவுத் துறைகளையும் கலைகளையும் கவனம் செலுத்திக் கற்க வேண்டிய சிறுவர், படங்களை வரைய எடுத்துக் கொள்ளும் உளமுயற்சி, உடல் முயற்சி, காலமிகை ஆகியவற்றைச் செலவிட்டு எழுத்துகளைக் கற்கப் பெருந்தொல்லைபடுவது வேண்டாதது என்பதாலும் அவ்வினா பொருந்தாதாம்.

மணலில் கைவிரலால் எழுதி எழுதி, கல்விப் பருவத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டும், ஓலையில் எழுத்தாணியால் எழுதி இடர்ப்பட்டும், பத்துப்பேர் படிக்கச்சென்று ஓரிருவரே தேர்ச்சி பெற்றுக் கற்றவராக வெளிப்பட்ட காலத்தில் நாம் இன்று இல்லை.

எழுது பொருள்களும் எழுது கருவிகளும் உரு மாறிமாறி மலிந்துவிட்ட இக்காலத்தில் எளிதாகவும் விரைவாகவும் சிறு முயற்சியாலேயே எழுதி, பல்வேறு துறைப்பட்ட அறிவைப் பெருக்கிக்கொள்ள தமிழ்ச் சிறார்க்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டும்.

மாணவர்க்கு எளிமையாக அமையவும் அதாவது கற்றல் கற்பித்தல் இரண்டிற்கும் உதவியாக நிற்கவும், தட்டச்சுப் பொறி போன்றவற்றில் குறைந்த எண்ணுள்ளனவும் செப்பம் செய்யப்பெற்றனவுமான எழுத்துகளே தேவையாக அமையவும், தமிழ் எழுத்து வரிவடிவைத் திருத்தியாக வேண்டியுள்ளது. எழுத்துச் சீர்திருத்தம் என்பது வரிவடிவச் சீர்திருத்தமே.

## ஏன் எழுத்துச் சீர்திருத்தம் ?

தமிழ் எழுத்துகளின் பழமையான வரிவடிவங்கள் பழங் காசுகள், பானையோடுகள், நடுகற்கள், கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், ஓலைச்சுவடிகள் ஆகியவற்றின் வாயிலாகவே அறியப் பெறுகின்றன. பிற்காலத்தே தாள் களில் எழுதப் பெற்றுள்ளன. பின்பு அச்சு எழுத்துகளாயின. தொல்காப்பியர் சொல்லிய எழுத்து வரிவடிவங்கள் மேற் சொல்லிய எவற்றிலும் அப்படியே இல்லை.

எழுத்து வடிவங்கள் பல்வேறு பெயர்களில் உருமாறி வழங்கியுள்ளன. கல்வெட்டுகளில் காணும் பண்டைய வடிவங்கள் தமிழ் எனப்பெயர் பெற்றன. அசோக மன்னர் காலத்துக் கல்வெட்டு வகையைச் சார்ந்தன, தமிழ்ப் பிராமி எனப்பெயர் பெற்றன. இவை பழந்தமிழ் எழுத்துகளை ஒட்டி அமைந்தன. பண்டைத் தமிழ் எழுத்துகளே இன்றைய தமிழ் எழுத்துகள்.[6] பின்பு கண்ணெழுத்து, வட் டெழுத்து என்னும் பெயர் பெற்று வழங்கின.

''தொன்மை வடிவங்களுள் 'வட்டெழுத்து' மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது''. ''வளைந்த கோடுகளையே அதிகம் பெற்றிருந்ததால், இந்த வகை எழுத்திற்கு வட் டெழுத்து, வட்டம் என்ற பெயர்கள் உண்டாயின. சேர நாட்டில் பிற்கால வட்டெழுத்திற்கு 'மலையாண்மா' என்றும் 'கோலெழுத்து' என்றும் பெயர் வழங்கின''. ''வட்டெழுத் திற்குத் 'தெக்கன்மலையாளம்', 'நானாமோனம்' என்ற வேறு பெயர்களும் உண்டு.''[7]

புள்ளியிடும் முறையைத் தொல்காப்பியர் சொல்லியிருந் தாலும் 'புள்ளி' என்றே மெய்க்குப் பெயர் உண்டென்றாலும் கல்வெட்டுகளில் முன்பு புள்ளி வெட்டப்படவில்லை.

'' அரிக்கமேடு எழுத்துகளின் காலம் கி. பி. 1–2 ஆம் நூற்றாண்டுகள் ஆகும்.

அரிக்கமேடு எழுத்துகளுக்குப்பின் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை. புள்ளி இடும் முறை இக்காலத்தில்தான் தோன்றியது. ''[8]

'' இந்தக் காலத்திற்குப் பின்பு மெய்யெழுத்துக்கள் பொது வாகப் புள்ளியிடப்பட்டு வந்தன. '

' மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் ' (எழு.15)
' எகர ஒகரத் தியற்கையு மற்றே' (எழு. 16)

என்னும் தொல்காப்பிய விதிப்படி உயிரெழுத்துக்களிலும், உயிர் ஏறிய மெய்யெழுத்துக்களிலும் எகர ஒகரக் குறிகள் சில சமயங்களில் புள்ளியிடப்பட்டு வந்தன. ''[9]

இன்று நாம் காணும் பண்டை இலக்கியங்கள் அனைத்தும் ஓலையில்தான் எழுதப் பெற்றிருந்தன. அவ்வோலைச் சுவடி யிலும் புள்ளியில்லா மெய்யெழுத்துகளே இருந்தன. எகரம், ஒகரம் முதலியவையும் அவ்வோலைச் சுவடிகளில் புள்ளி யின்றியே எழுதப் பெற்றிருந்தன. அண்மைக் காலத்தில் (இருபதாம் நூற்றாண்டில்) புள்ளியிடப்பட்ட ஓலைச்சுவடிகளும் உண்டு எனத் தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடியியல் துறையினர் கூறுகின்றனர். [10]

வெ. சுந்தரம் கொடுத்துள்ள 'கல்சொல்லும் கதைகள்' என்னும் நூலில் காணப்படும் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாறுதல் களைக் காணின் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஐகார வடிவம் அறியப்படுகின்றது.[11] எனினும் கி.மு. நாலாம் நூற்றாண்டு முதலே மாங்குளம், திருநாதர்குன்றம் கல்வெட்டு களில் ஐ வடிவம் கிடைக்கின்றது என்பர் கல்வெட்டறிஞர்.[12] அந்நூலில் ஔகாரம் பற்றிய வடிவமே இல்லை. எனினும்

''8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவ மன்னர்களின் புல்லூர்ச் செப்பேடு, காசக்குடிச் செப்பேடுகளில் 'ஔ' கார எழுத்து உள்ளது'' என்பர் கிருட்டிணமூர்த்தி.[13]

தொல்காப்பியர் இவற்றையும் உயிர் என்றே சொல்வதால் அவர் காலத்தில் இவற்றிற்கும் வரிவடிவம் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் இன்றும் இருக்கின்றன. அவற்றில் ஐகாரம் உண்டே!

'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' என்ற கூற்றுக்கு மாறாக எல்லா வடிவமும் மாறியே நிற்கின்றன. தொல்லை வடிவினவாகிய அவ்வெழுத்துகள் மாற்றம் பெறப்பெற எல்லா ராலும் ஒப்புக்கொள்ளப் பெற்றனவாகையால்தான் இலக்கிய இலக்கண நூல்கள் தொடர்ந்து பயிலப்பட்டன.

''தொல்லை வடிவின எல்லா வெழுத்துமாண்டு
எய்தும் எகர ஒகர மெய்புள்ளி''.

(நன்னூல் எழுத்தியல் 98)

என்னும் நூற்பா முறைப்படி, எகரமும் ஒகரமும் ஆகிய உயிர் களும் மெய்யெழுத்துகளுமே புள்ளி பெற்றன என அறிகிறோம்.

ஆனால் தொல்காப்பியர் காலத்தில்,

''அவற்றுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையில்''[14] என்ற நூற்பாவையடுத்து, ''குற்றிய லுகரமும் அற்றென மொழிய''[15] என்று அமைந்துள்ள நூற்பாவால் குற்றிய லுகரமும் புள்ளி பெற்று வழங்கியது என அறிகின்றோம். ஆயினும் மேற்காணும் நன்னூல் நூற்பாவுரையில்,

''ஆண்டு என்ற மிகையானே ...
குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும்
உளரெனக் கொள்க''

என்று மயிலைநாதர் எழுதுகின்றாராகையால் குற்றியலுகரம், குற்றியலிகரங்களுக்கும் புள்ளியிட்டுள்ளனர் என்பது தெளிவு.

தொல்காப்பியர்க்குப் பின்பும் மயிலைநாதர்க்கு முன்பும் உள்ள காலத்தில் குற்றியலிகரமும் குற்றியலுகரம் போலப்

புள்ளி பெற்றது. இதனைச் ' சங்க யாப்பு உடையார் ' நூற்பா செய்து தெளிவுறுத்துகின்றார். இது, ''குற்றியலுகரமும் ஆய்தமும் என்ற முப்பாற்புள்ளி பெற்ற எழுத்துக்களும் என்று பொருள் கூறுவர் பேராசிரியர்.[16] 'சிவஞான முனிவரும் இதைத் தழுவித் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியும் கூறுவர். 'குற்றிய லிகரமுங் குற்றியலுகரமும் – மற்றவை தாமே புள்ளி பெறுமே' என்னும் சங்கயாப்பு (யாப் – விருத்தி : 27ம் பக்.) நூற்பாவால் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் முற்காலத்தில் புள்ளி பெற்று வழங்கியமை அறியப்படும். இத்தகைய வழக்கு இன்றும் மலையாள நாட்டிலுள்ளது,''[17] என்று தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகின்றாராகையாலும் தெளிவாகின்றது.

இன்னும் பேராசிரியர், தொல்காப்பிய பொருளதிகார 'ஒற் றெழுத் தியற்றே குற்றிய லுகரம்' என்னும் நூற்பாவுக்கு உரை வரையும்போது, ''மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்' எனக்கூறி 'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' எனக் குற்று கரத்திற்குப் புள்ளி பெறுதலுங் கூறினான், அதுபோலக் குற்றிகரமும் புள்ளி பெற்று நிற்றல் உடைத்தெனலும் ... ஆயிற்று ... இவற்றையெல்லாம் 'ஒற்றெழுத் தியற்றே' என்றதனாற் புள்ளியிட்டெழுதுக'' என்று வியங்கோளாற் புள்ளியிடுமாறு கூறுவதாலும் வலியுறுகீன்றது. கொக்கு, தொடர்பு, கேண்மியா, சென்மியா எனவரும். இவற்றின் கு, பு, என்பவற்றின் மேலும் மி என்பதன் மேலும் புள்ளி யிடப்படவேண்டும்.

எனினும் கல்வெட்டில் 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு மெய், எகர, ஒகரங்களின் மேல் இடப்படும் புள்ளி ஒழிந்தது.[18]

இங்குக் குறிக்கப்பட்டவற்றால், எகரத்துக்குமேல் புள்ளி இடப்பெறும் என்று அறிகின்றோம். ஆனால் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை இயக்குநர் இரா. நாகசாமி வேறுவிதமாக வும் குறிப்பிடுகின்றார். எகரக் குறியோடு இகரக்குறியும் வேறுபட்டிருந்தது என்பதை, ''எ, ஒ—கரத்தியற்கையு மற்றே' என்று தொல்காப்பியம் குறிக்கும். இதன்படி, குற்றியல்

எகரத்தில் நடுவில் புள்ளியிருத்தல் வேண்டும். தற்காலத்தில் எழுதப்படும் எகரத்தில் புள்ளி கிடையாது. ஆனால் பண்டைய எகரத்தின் நடுவில் புள்ளி உள்ளதைக் காண்கிறோம். இதை முதன் முதலில் இக்கட்டுரை ஆசிரியர் புதிதாகக் கண்டெடுக்கப் பட்ட நாணயத்தில் கண்டு பிடித்தார். அதே போன்று 'குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி யும் எழுத்தோரன்ன' என்று தொல்காப்பியம் கூறும். பண்டைய தாமிழி எழுத்துக்களில், குற்றியல் இகரம் மூன்று புள்ளிகளால் எழுதப்பட்டுள்ளதைப் பல கல்வெட்டுக்களில் காணலாம்''[19] என்று அவர் எழுதுகின்றாராகையால் எகரம் நடுவில் புள்ளி பெற்றது என்றும் குற்றியலிகரம் மூன்று புள்ளி பெற்றது என் றும் அறிகின்றோம்.

மேலும், வே. தில்லைநாயகம் அவர்கள், ''வீரமாமுனிவர் உயிர்மெய்க் குறிலுக்கும் மெய்யெழுத்திற்கும் தலையில் புள்ளியிட்டுக் கொண்டிருந்த குழப்பத்தை நீக்கினார்.'' என்று குறிப்பிடுவதால், உயிர்மெய்க் குறிலுக்கும் புள்ளி வைக்கப்பட்ட காலமும் இருந்திருக்கிறது (கெ-கெ, கெ-கே, கொ-கொ, கொ-கோ- இவற்றில் குறில் கொம்பின்மேல் புள்ளி இடப்பட வேண்டும்.) என்றும் மெய்க்குத் தலையில் புள்ளியிடு தலையும் நீக்கினார் என்பதால் அவர் காலத்தில் நீக்கப்பட்ட புள்ளியைப் பிற்காலத்தில் மீண்டும் வைக்கிறோம் என்றும் அறிகின்றோம்.

இனி, ''ஏனை உயிரோடு உருவு திரிந்துயிர்த்தலும்'' (தொல்-நூல் மரபு) என்னும் நூற்பா அடிக்கு உரை வரையும் நச்சினார்க்கினியர், ''உருவு திரிந்து உயிர்த்தலாவது மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம். கி,கீ, முதலியன மேல்விலங்கு பெற்றன. கு,கூ, முதலியன கீழ் விலங்கு பெற்றன. கெ,கே,முதலியன கோடு பெற்றன. கா,ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக் காலத்தார் காலாக எழுதினார். மகரம் உட்பெறு புள்ளியை

வளைத்தெழுதினார். கொ, கோ, நொ, ஙோ, முதலியன புள்ளியுங்கோடும் உடன் பெற்றன '' என்று எழுதுகின்றார். கோடு என்பதை இக்காலத்தார் கொம்பு என்பார்.

இவ்வுரைப்படி, அகரம் நீங்கிய மெய்கள் மற்றஉயிர் ஏறும் போது மேல்விலங்கும் கீழ்விலங்கும்,கோடும், புள்ளியும், புள்ளியும் கோடும் பெற்று நான்குவகையாக உருவு திரிந்தன. இவ்வுருவுகளிலும் சில, நச்சினார்க்கினியர் காலத்தில் வேறு திரிபும்பெற்று வழங்கியுள்ளன. க. ங. என அருகே எழுதப் பெற்ற புள்ளியைக் காலாகத் திரித்துக் கொண்டுள்ளனர் (கா, ஙா). மகர மெய்யில் உட்பெறு புள்ளியை நீக்கி வளைத்து 'ம்' என எழுதிக்கொண்டனர். மற்ற மெய்களைப் போலப் புறத்தே (மேலே) பெற்ற புள்ளியோடு உட்பெறு புள்ளியும் ஆகிய இரண்டு புள்ளிகளைப் பெற்ற மகரமெய் வளைத்தெழுதியதால் ஒரு புள்ளி குறைந்த மகரமெய்யாக (ம்) வடிவம் பெற்றது. கெ. கே. ஙெ. ஙே. எனப் புள்ளியும் கோடும் பெற்றன, புள்ளி காலாகி, கொ,கோ,ஙொ,ஙோ என உருவுத் திரிந்தன. இங்கே குறிக்கப்பெறும் புள்ளியைப் பற்றித் தேவநேயப்பாவாணர், ''புள்ளி முதலாவது ஒரு சிறு நட்டுக் கோடாயிருந்து பின்பு குத்தாய்க் குறுகிற்று என்பர்,'' [20]என்று புள்ளிகூட முன்பு நட்டுக் கோடாய் இருந்தது எனக் குறிப்பிடுவார்.

தொல்காப்பியரும் எல்லா ஒலியெழுத்துகளுக்கும் வரியெழுத்து - வரிவடிவம்-கூறினாரில்லை. இதனை, ''எல்லா மெய்யும் உருவாகி' . ......எனவும் சிறுபான்மை வடிவும் கூறுவர் ......... பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினார், உயிர்க்கு வடிவின்மையின். 'எகர ஒகரத் தியற்கையு மற்றே' எனச் சிறுபான்மை உயிர்க்கும் வடிவு கூறினார்''[21] என்னும் நச்சினார்க்கினியர் உரையால் அறிகின்றோம்.

தொல்காப்பியர் சொல்லிய எழுத்து வடிவங்களையும் அவர்க்குப் பின்பு அவ்வடிவங்கள் மாறியுள்ளன என்பதையும் தொகுத்துத் தருகின்றார், டாக்டர் மு. வ.

''தொல்காப்பியத்தில் விளக்கப்படும் எழுத்து வடிவம் சில:

1. மெய்யெழுத்துக்கள் புள்ளி பெறல்.
2. எகர ஒகரக் குறில் புள்ளி பெறல்.
3. குற்றியலுகரமும் குற்றியலிகரமும் புள்ளி பெறல்.
4. ம் என்பது ப் என்ற வடிவாக, பகரத்தினுள் புள்ளி யிட்டு எழுதப்படல்.

பிற்கால மாறுதல்கள்:

1. எகர ஒகரக் குறில் புள்ளி பெறாமை
2. ஏ ஓ என்பவை காலும் சுழியும் பெறல்.
3. குற்றியலுகரமும் குற்றியலிகரமும் புள்ளி பெறாமல் மற்ற உகர இகரங்களைப் போலவே எழுதப்படல்.
4. ப் என எழுதாமல் புள்ளியை உள்ளே வளைத்து ம என எழுதுதல்.
5. கா ஙா முதலியவற்றில் கால் சேர்க்கப்படல்.

முற்காலத்தில் இவை க. ங என எழுதப்பட்டன''[22].

''அக்காலத்தில் கெ, கே, கொ, கோ போன்ற எழுத்துக்களில் புள்ளி வைத்து எழுதுவார்கள். அதனால் வேறுபாடு காண முடியாததாக விளங்கியது. தற்பொழுதுள்ள வடிவத்திற்குப் பழைய வடிவங்களை மாற்றியமைத்து அச்சுக் கலைக்குத் தமிழ் எழுத்துக்களை அறிமுகம் செய்த பெருமை வீரமாமுனிவருக்கே சாரும்,''[23] என்று போற்றப் பெறுகின்றார், வீரமாமுனிவர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ | -எ | | | | |
| எ | -ஏ | | | | |
| ஒ | -ஒ | | | | |
| ஒ | -ஓ | | | | |
| கெ. | -கொ | கெ | கெ | கொ | கொ |
| கே. | -கோ | கெ | கே | கொ | கோ |

(இவற்றில் எகர, ஒகரக் குறிலுக்குமேல் புள்ளியும் உயிர் மெய்க்குறிலுக்கு அருகே புள்ளியும் இடப்பட வேண்டும்.)

இவ்வாறு மாற்றியுள்ளார் வீரமாமுனிவர் என்று அறிகின்றோமாயினும் வீரமாமுனிவர்க்கு முன்பே நச்சினார்க்கினியர் 'அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினார்' என்று குறிப்பிடுவதால், காலாக வீரமாமுனிவர்க்கு முன்பே மாற்றம் பெற்று விட்டது என்பது உறுதியாகின்றது.

இன்னொன்று. ஏகாரம் ஓகாரங்களுக்குக்கூட ஒரு காலத்தில் புள்ளியிட்டு வழங்கியிருக்கின்றனர் என்பதையும் அறிகின்றோம். சான்று இதோ: ''19ஆம் நூற்றாண்டினராகிய இராமாநுச கவிராயர்; 'இவர் நன்னூல் சூத்திரம் ஒன்றைத் திருத்தி அதற்கேற்ப உரையும் எழுதினார்.

தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் ஏகாரம் ஓகாரம் மெய்ப்புள்ளி

என்பது நன்னூல் சூத்திரம். இதனை,

தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் ஏகாரம் ஓகாரம் மெய்ப்புள்ளி

என்று திருத்தியுள்ளார். விளக்கம் எழுதும்போது, 'இக்காலத்தார் ஏகாரம் ஓகாரங்களுக்கே புள்ளியிட்டு எழுதுவது பெருவழக்காயினமையால் இவ்வாறு மாற்ற வேண்டியதாயிற்று' என்று குறித்துள்ளார்'' என்று சோம. இளவரசு குறிப்பிடுகின்றார்.[24]

இனி, ஐகார ஔகார உயிர்மெய்கள் பெற்ற மாற்றம் பற்றி, ''முன் இரட்டைப்புள்ளி பெற்ற ஐகார உயிர்மெய் எழுத்து '..க' என்பது கால்பெற்று 'ாக' என்று மாறிப் பின் 'ெகெ' என்று ஆகியிருக்கிறது. மலையாளத்தில் இவ்வடிவம் இன்றும் உள்ளது. 'ெெ' என்னும் இரட்டைக் கொம்புகள் விரைந்து எழுதுவதில் காலப்போக்கில் இணைந்து 'ை' என்னும் வடிவம் பெற்றது..... புள்ளியும் கோடும் பின் இரட்டைப் புள்ளியும் பெற்ற ஔகார உயர்மெய் எழுத்து 'கெ..' என்பது கால் பெற்று 'கொா' என்றாகி, காலப்போக்கில் 'ாா'

இணைந்து 'ள' என்னும் வடிவம் எய்தியிருக்கிறது'' என்று இறையரசன் குறிப்பிடுகின்றார்.[25] 'ண' 'ள' ஆகிய இரண்டு துணைவரிவடிவங்களும் எப்படிஉருமாறி வளர்ந்து இன்றுள்ள வடிவம் பெற்றன என்பதை இச்சான்று காட்டுகின்றது.

மேலும் இக்காலம் போலன்றி, அச்சில் மெய்யெழுத்து களுக்குப் புள்ளியில்லாமல் அச்சேற்றப் பெற்ற காலமுமுண்டு. ஓலைச்சுவடியில் புள்ளியில்லாமல் எழுதியதைப் பார்த்து அச் சேற்றியதனால் அவ்வாறு நிகழ்ந்திருக்கலாம்.

சீகன் பால்க் ஐயர் 1715 இல் தரங்கம்பாடியில் முதன் முதலில் அச்சிட்ட விவிலிய நூல் புதிய ஏற்பாட்டின் முதல் பக்கத்தில்,

''சுதனுகிய சறு வேசுா ஞயிருககிற
எசுககிறீஷது நாதாானவா''

என அச்சேற்றப் பெற்றுள்ளது.[26]

அச்சு எழுத்தினை 'எழுதா எழுத்து' என்று பெயர் கொடுத்துச் சபாபதி முதலியாரும் திருத்தணிகை விசாகப் பெரு மாளையரும் முறையே வழங்கிய பாயிரமும் சாற்றுக் கவியும் பெற்றுப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் (கி.பி. 1811) அச்சு ஏற்றப் பெற்ற 'தமிழ் விளக்கம்' என்னும் உரைநடையில் அமைந்த இலக்கண நூலின் முகப்புப் பக்கத்தில்,

தமிழுடைய வியலபைக
கெழவியு முததாமுமா யெழுதபபடட
ஒரு
சுருககமான
வயனம
அடஙகிய
தமிழ விளககம
திருவேறகாடு சுபபருய முதலியாரால

உணடு பணணி
யிஙகிலீசு பாஷையில
மொழி பெயாககபபடடது.
செனனை படடணததில
அசசு பொடடது.
சகாபதம 1732 (எண் தமிழில்)[27]

என்று இவ்வாறு அச்சாகியுள்ளது. இதில்,

1. மெய்யில் புள்ளியில்லை.

2. ஆகாரக் குறியீடாகிய காலுக்கும் (ா) ரகரத்துக்கும் வேறுபாடு இல்லை.

3. எகரத்துக்குமேல் புள்ளியில்லையாதலால் தொல் காப்பியம் சொல்லியது போல் ஏகாரமாகிறது.

4. ஏகாரக் குறியீடு இக்காலத்துள்ள இரட்டைச் சுழிக் கொம்பாக அமையாமல் ஒற்றைச் சுழிக் கொம்பாக அமைந்துள்ளது.

சென்ற நூற்றாண்டில் தமிழ்ப் பாலபாடம் எழுதிய ஆசிரியரும் ஈகாரத்துக்கு இகரக் குறியீட்டையே மேலே சுழித்து எழுதியுள்ளார். இவர்க்கு முந்திய காலத்தில் வழங்கி இக்காலத்திலும் வழங்கும் 'ஈ' வடிவத்தைத் திருத்தி அமைத்துள்ளார்.

கல்வெட்டிலோ, ''உயிர்மெய்யெழுத்துக்களில் இகரம், ஈகாரம் ஆகியவற்றின் குறிகள் பொதுவாக வேறுபாடு இல்லாமல் ஒரே விதமாக எழுதப்பட்டு வந்தன,''[28] என்பார் தி. நா. சுப்பிரமணியன்.

பெரியார் செய்த சீர்திருத்தத்தைத் தமிழ் நாட்டரசு ஏற்றுக் கொண்டதால் நாமும் ஏற்றுக் கொண்டோம்.

பெரியார் திருத்தியதற்கு முன்பு இருந்தனவும் திருந்தியனவும்:

| | |
|---|---|
| ணா - ணா | ணொ - ணொ |
| றா - றா | றொ - றொ |
| னா - னா | னொ - னொ |
| ணை - ணை | ணோ - ணோ |
| லை - லை | றோ - றோ |
| ளை - ளை | னோ - னோ |
| னை - னை | |

இத்திருத்தத்தால் பதின்மூன்று வரிவடிவங்களில் பதினொன்று குறைந்து விட்டன! ஓரொலிக்கிருந்த இரண்டு வடிவங்கள் மூன்றாயினமை வேறு. கொம்பும் காலும் முன்பு இருந்தனவே.

உயிர்மெய்யெழுத்து, இக்காலத்தில் போலன்றிக் கல்வெட்டில் உயிரும் மெய்யுமாகத் தனித்தனியாக எழுதப்பட்டும் வந்தது என்பதை, ''உயிர்மெய்யெழுத்துக்களின் ஆ,இ,ஈ,எ,ஐ, ஒ ஆகியவற்றின் குறிகள் மெய்யெழுத்துக்களினின்றும் பிரித்தே எழுதப்பட்டு வந்தன''[29] என்று தி. நா. சுப்பிரமணியன் கூற்றுகொண்டு அறியலாம்.

கல்வெட்டுகளிலும் ஓலைச்சுவடிகளிலும் செப்புப்பட்டயங்களிலும் பழங்காசுகளிலும் உள்ள வடிவங்களை இன்றைய தமிழ்ப் பேரறிஞர்களும் தனிப் பயிற்சியின்றேல் படித்தறிதற்கியலாதிருத்தல் வரிவடிவங்கள் மாறியமையே. கல்வெட்டுகளில் சில எழுத்துகள் எழுதப்பட்டுள்ள முறைகளையும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுள்ள முறைகளையும் கீழ்வரும் சான்றுகளால் தெளியலாம்.

'' ந்,ர் என்னும் எழுத்துக்கள் ன்,ற் என்னும் எழுத்துக்களாக மாறுகின்றன. நெட்டெழுத்துக்களான ஏ, ஓ என்பவை எ,ஒ என்னும் குற்றெழுத்துக்களிலிருந்து பிரித்து அறிந்து கொள்ளமுடியவில்லை. இகர, உகர நெட்டெழுத்துக்கள் மிக

அருமையாகச் சாசனங்களில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. மெய்யெழுத்துக்களின் மேல் இடவேண்டிய புள்ளிகள், இடப் படாமலிருக்கின்றன. மிக அருமையாக மட்டும் புள்ளிகள் இடப்பட்டுள்ளன.

''சில எழுத்துக்கள் உருவஅமைப்பு இன்ன எழுத்து என்று தெரிந்து கொள்ள முடியாதபடி எழுதப்பட்டுள்ளன. முக்கிய மானது ா என்னும் எழுத்து. இந்த எழுத்து ஆகாரத்தைக் குறிக்கும் காலாகவும், ரகரமாகவும் ர் என்னும் மெய்யெழுத்தா கவும் இப்போதைத் தமிழ் எழுத்தில் காணப்படுகின்றது. கொ என்னும் எழுத்தைச் சாசனத்தில் கொ என்றும், கோ என்றும் கெர் என்றும் கேர் என்றும், கெரஎன்றும், கேர என்றும் வாசிக் கலாம்... இராசேந்திர சோழ தேவரின் சாசனம் ஒன்றில் கொளா என்று எழுதப்பட்டிருந்ததை ஒருவர் கொள்ள என்று எழுதினார். இதன் சரியான வாசகம் கேரளர் என்பது.''[30]

குறில் நெடில் வேறுபாடு கூட தெரியாது மயங்கும் நிலை! இன்னும்,

''இது கொம்பு-இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடி யாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே இராது. ரகரத்துக் கும், காலுக்கும் வேற்றுமை தெரியாது. சாபம், சரபமாகத் தோற்றும். சரபம் சாபமாகத் தோற்றும். ஓரிடத்தில் சரடு என வந்திருந்த வார்த்தையை நான் சாடு என்றே பலகாலம் எண்ணி வந்தேன். தரன் என்பதைத் தான் என்று நினைத் தேன்; இடையின ரகரத்துக்கும் வல்லின றகரத்துக்கும் பேதம் தெரியாமல் மயங்கின இடங்கள் பல.'' [31]

இக்காரணங்களால் தமிழ்மொழி எழுத்து வடிவங்கள், எழுதப்பயன்படு பொருளுக்கும் எழுதுகோலுக்கும் ஏற்ப காலத் துக்குக் காலம் மாறி - திருந்தி-சீர்திருந்தி-வடிவம் பெற்றுள் ளன என அறியலாம். (படம் 1,2) எத்தனை எத்தனை மாற் றங்கள்! ஆகவே இன்றும் குறையுள்ள எழுத்துகளைச் சீர் திருத்த முயல்கின்றோம். வேண்டாததன்று; வேண்டியதே.

## இன்றும் குறைகள்:

அ. இகரம், ஐகாரம், ஒகரம், ஓகாரம், ஔகாரம் ஆகியன எளிமையில்லாதன. இவை சிறுவர்களால் எழுதப்படப் பெரு முயற்சி தேவைப்படுகின்றது. அவர்கள் மனதில் எளிதாகக் கொள்ள முடியாதன. உயிர்மெய்களும் தெளிவும் சீர்மையுமில்லாமல் அமைந்துள்ளன. உளமுயற்சியோடு உடல்முயற்சி (உடல்உழைப்பு) மிகுதியாகத் தேவைப்படுவதால் நீண்ட காலம் வீணாகின்றது. விரைந்து எழுதப் பயில, எளிமையும் சீர்மையும் தெளிவும் இன்றியமையாதன.

ஆ. மெய்க்கு மேல்புள்ளி இடவேண்டியிருப்பதால் நேரம் வீண்; விரைவும் கிட்டவில்லை.

இ. இகர, ஈகார, ஐகார வடிவங்கள் தம்முள் ஒவ்வா வடிவங்கள். சீர்மையில்லாதன. நச்சினார்க்கினியரும், ''இ-ஈ, ஐ, தம்முள் வடிவு ஒவ்வா'' [32] என்று அன்றே இக்குறையைக் குறிப்பிட்டுள்ளார்.

ஈ. புள்ளி நீங்கிய மெய்யெழுத்துக்கு வலப்பக்கத்தில் ஆகாரக் குறியீடு நிற்கின்றது. ஆனால் எகரம், ஏகாரம், ஐகாரங்கள் இடப்பக்கத்தில் நிற்கின்றன. ஒகர, ஓகார, ஔகாரங்கள் இருபுறமும் நிற்கின்றன. இகர, ஈகார, உகர, ஊகாரக் குறியீடுகள் ஒட்டி நிற்கின்றன. இந்நிலை சீர்மையில்லாமையாகும்.

இப்போது வழங்கும் உயிர்மெய் வடிவங்கள் பெருங்குறையுடையனவே. ''தமிழில் உயிர்மெய்யெழுத்துக்கள் எப்படி ஒலிக்கும் என்பதை இலக்கண ஆசிரியர் பவணந்தியார் விளக்கிச் சென்றுள்ளார். மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலிக்கும் என்பதே அவர் செய்த விளக்கம்.[33] இது ஒலிவடிவிற்கு ஆகும். ஆனால் வரிவடிவில் பல எழுத்துக்கள் அவ்வாறு (மெய் முன்னும் உயிர் பின்னுமாக) அமையவில்லை. 'கி' என்பதை

எழுதும்போது 'க' என்று மெய் முன்னெழுதி உயிரின் வடிவை பின்னெழுதுகிறோம். 'கெ' என்பதை எழுதும்போது 'ெ' என்பதை முன் எழுதுவது தவறன்றோ? 'தை' என்று எழுதின் தகர மெய்யும் ஐகார உயிரும் கூடிய உயிர்மெய் என்பது தெளிவாகும். 'ஐ' என்ற ஒலியை-அதன் குறியை-'தை' என்று மெய்க்குமுன் எழுதுவது பொருந்துமாறு யாங்ஙனம்? கொ, கோ, கௌ முதலான எழுத்துகளில் மெய்யை இடையில் வைத்து, உயிரின் வடிவை முன்னும் பின்னுமாக பிரித்து எழுதுதல் பெருங்குறையாம்,

மேற்சொன்ன குறை தமிழிலும் மலையாளத்திலுமே உண்டு. தெலுங்கிலும் கன்னடத்திலும் இல்லை. தெலுங்கிலும் கன்னடத்திலும் மெய்யின் வடிவு எழுதின பிறகே, உயிரின் வடிவை எழுதுதல் இன்றும் உள்ள வழக்கம் ஆகும்.''[34]

உ. இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய்கள் வெவ்வேறு வடிவங்கள் உடைமையால்-ஒட்டி நிற்பதால் - வரிவடிவ எண்ணிக்கை கூடுகின்றது. பிற உயிர்மெய் வரிசைகளெல்லாம் மெய்யும் உயிர்க்குறியீடும் த்னிததனியே நிற்க, இவ்வரிசைகள் மட்டும் ஒட்டி நிற்கின்றன. ஒட்டி நின்ற சில ஆகார ஐகார ஒகர ஓகார வடிவங்கள் பெரியாரால் திருத்தப்பட்டன.

ஊ. ஓர் ஒலிக்கு இரண்டு வடிவங்களும் இரண்டு ஒலிக்கு மூன்று வடிவங்களும் அமைந்த நிலை பொருத்தமில்லை. ஊ, ஒள, கொ முதலாயின.

எ. ணகரம் நீளவடிவமும் ணுகர ணூகார உயிர்மெய்கள் மிக நீளவடிவமும் உடைமையால் தட்டச்சில் இரண்டாக வெட்டி இரண்டெழுத்தாக அமைத்து இரண்டு முறை தட்டி ஓரெழுத்தாகத் தட்டுகின்றனர்! கி, கு போன்றனவும் மேல் விலங்கும் கீழ்விலங்கும் கொண்ட வடிவம் உடைமையால் இரண்டு தட்டு, இடவீண் ஆகிய குறைகள் ஏற்படுகின்றன.

ஏ. தட்டச்சில் மெய்யைத் தட்ட முதலில் புள்ளியைத் தட்டிப் பின்பு எழுத்தைத் தட்ட வேண்டும். பூ என்ற உயிர்

மெய்யைத் தட்டுதற்கு முதலில் கீழ்விலங்கினைத் தட்டிப் பின்ப எழுத்தைத் தட்ட வேண்டும். இப்படிப் புள்ளி, மேல்விலங்கு, கீழ் விலற்கு, ஐகாரக்குறியீடு (பழையமுறை) ஆகியவற்றை முன் தட்டிப் பின்பு எழுத்துக்களைத் தட்டவேண்டும். இது, கையால் எழுதும் முறைக்குத் தலைகீழ் மாற்றமாகும்.

ஐ. கணிப்பொறி போன்றவற்றில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் எழுத்தை அடக்க முடிவதில்லை என்பர். கீழ், மேல் விலங்குகள், ண, ணு, ணூ போன்ற நீண்ட எழுத்துகள், கொ, கோ போன்ற மூன்று வடிவங்கொண்ட எழுத்துகள் அவ்வாறுள்ளவை. இடச்சிக்கனம் இல்லை.

ஒ. '' தமிழில் நாம் தட்டச்சு போன்ற இருநூற்றாண்டுப் பழமையுடைய கருவியைக்கூட முறையாகப் பயன்படுத்த இயலவில்லை. தொலை எழுதி தமிழில் இல்லை. தமிழில் தந்தி கொடுக்க இயலாது. தொலையெழுதிச் செய்தி அனுப்ப இயலாது. மின்னணுத் தட்டச்சில் ஆங்கிலத்தில் எத்தனையோ அச்சுகள் இன்று பயன்படுத்தப்படுகின்றன. தமிழில் ஒரேவகை அச்சைத்தான் பயன்படுத்துகிறோம். ஆங்கிலத்தில் பல அளவுகளில் பல வரிவடிவ அமைப்புகளில் ஸ்டென்சில் கடைகளில் வாங்கலாம். இந்தச் சாதாரணக் கருவிக்கூடத் தமிழில் உருவாகவில்லை, ''என்கிறார் குழந்தைசாமி, தமது 'கல்வியுகத்திற்குத் தமிழ்' என்னும் ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கட்டுரையில்.

ஓ. சில வரிவடிவங்கள் ஒன்று போலத் தோன்றுகின்றன. அதனால் பயில்வார் குழம்பிப் பிழைபட எழுதுகின்றார்கள். 'மு ழு; ஐ, ஜ'. மேலும்வேறு சிலர் 'க்' மெய்யையும் 'கு'உயிர் மெய்யையும் 'கு' என்பதின்மேல் புள்ளியிட்டுக் கூட்டு வரிவடிவமாக எழுதுகிறார்கள். விளம்பரப்பலகைகளிலும் எழுதுகின்றார்கள்! இது வழக்கில் இல்லாத பெருங்குழப்பம். இன்னும் சிலர் அறியாமல் 'ஞா' என் 'ஞ' என்பதற்கு மாற்று வடிவமாக எழுதுகின்றார்கள்.

ஔ. இப்போது, தமிழ் எழுத்துத் திருத்தம் வேண்டாம் என்று மறுக்கும் திரு கி.ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தாம் எழுதிய 'தமிழின் சிறப்பு' என்னும் நூலில் 'எளிமைச் சிறப்பு' என்னும் தலைப்பில், '' சில மொழிகளில் எழுத்துக்கள் எழுது கோலைப் பலமுறை எடுத்து மேலும் கீழும் பக்கவாட்டிலும் சில புள்ளிகளையும் குறிகளையும் இட்டு எழுதியாக வேண்டும். சில மொழிஎழுத்துக்சள் ஒரு எழுத்தை எழுதவே பலமுறை எழுதுகோலை எடுத்தெடுத்துக் குறிகளிட்டு எழுதக் கூடியவை. இத்தொல்லை தமிழ் எழுத்துக்களுக்கு இல்லை,'' என்று எழுதுகின்றார். மேலும், ''தமிழ் எழுத்துக்களோ எனில், எழுத்தாணியையோ எழுதுகோலையோ எடுக்காமலேயே தொடர்ந்து எளிதாக எழுதிக் கொண்டே செல்லலாம்,[35] என்றும் குறிப்பிடு கின்றார்.

இவர் குறிப்பிடுவதில் உண்மையிருக்கின்றதா? மெய்யின் மீது புள்ளி வைக்கவும் ஈகாரம் ஊகாரம் ஔகாரம் என்னும் ஓருயிர் வடிவங்களையும் கி, கீ போன்ற உயிர்மெய்களையும் எழுத எழுதுகோலை எடுத்தெடுத்துத்தானே எழுத வேண்டி யிருக்கின்றது? 'இத்தொல்லை தமிழ் எழுத்துகளுக்கு இல்லை' என்று அவர் குறிப்பிடுவது எவ்வாறு பொருந்தும்?

இன்று ஓலைச்சுவடியையும் எழுத்தாணியையும் கைவிட்டு எழுதுதாளையும் எழுதுகோலையும் மையூற்றுத் தூவலையும் கையாள்கின்றோம். அச்சு இயந்திரங்கள் வந்த பின்பு தமிழ் எழுத்து மாறாது நிலையான உருவம் பெற்றன என்பர். என்றாலும் எளிமையில்லாமை, காலவீண், எண்ணிக்கையில் மிகை, ஓரொலிக்கு இருவடிவம், ஈரொலிக்கு மூவடிவம் உடைமை ஆகிய குறைகளிருப்பதால் வடிவங்களை மாற்றி யமைத்தல் வேண்டும்.

பிற மொழிகளில் எழுத்துத் திருத்தம் செய்து மொழியை வளப்படுத்தியுள்ளனர் என்பதையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். முன்பு நாற்பதாயிரம் எழுத்துகளைக் கொண்டிருந்த சீனமொழி எண்ணாயிரம் எழுத்துக்களாகக்

குறைந்து வழங்கியது. அதுவும் இப்போது இரண்டாயிரத்து இருநூற்று முப்பத்தாறாகக் குறைக்கப்பட்டுவிட்டது. சப்பான் மொழி மேலிருந்து கீழ்நோக்கி எழுதிய முறை மாறி இடமிருந்து வலமாக எழுதப் பெறுகிறது. செருமானியம் முதலான ஐரோப்பிய மொழிகள் சில தமது பழைய வரிவடிவங்களை விட்டு உரோமன் வரிவடிவங்களைப் பெற்றுக் கொண்டன. நம்நாட்டுமராட்டிய மொழியும் தனதுமோடி வடிவத்தைநீக்கித் தேவநாகரி வரிவடிவத்துக்கு மாறிக் கொண்டது. மலேசிய பாசாமலாயும் இந்தோனேசியா பாசாஇந்தோனேசியாவும் உரோமன் வரிவடிவம் பெற்றன. திராவிட மொழியான மலையாளமும் நானூற்றைம்பது குறியீடுகளைக் கைவிட்டு தொன்னூற்றிரண்டு வடிவங்களுக்கு எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டது.

தமிழ்மொழியும் காலப்போக்கில் எழுத்து வடிவத்தில் மாறி மாறி வளர்ந்தமொழியே. ஓலைச்சுவடி, கல்வெட்டு, செப்புப் பட்டயம் ஆகியவற்றில் இல்லாத காற்புற்றி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, வியப்புக்குறி, வினாக்குறி போன்ற குறிகளைப் பயன்கருதி ஏற்று மரபு வழிப்பட்டதாகவும் வளம் பெறுகிறது

இந்நிலையில் கி. ஆ. பெ. வி.உள்ளிட்ட 'தமிழகப் புலவர் குழு' எழுத்துத் திருத்தம் வேண்டாம் என்கிறது! நாம் சொல்கிறோம், ''எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும்; வேண்டும்.''

கா. சு. பிள்ளையும், ''வரிவடிவுக் கூட்டம் செப்பமடையாது வாளா விரிந்து பயனிலதாம்'' என்பர்.[36]

எழுத்துச் சீர்திருத்தம் வேண்டாமென்று குறுக்கிடுவோரைப் பற்றி டாக்டர் மு. வ. ''தட்டெழுத்துப் பொறிக்கும் அச்சுப் பொறிக்கும் ஏற்றவகையில் அவற்றைச் சிறிது மாற்றியமைக்க வேண்டும். இந்த வகையான மாற்றம் கருதிய சீர்திருத்தம் செய்யும்போது கண்மூடித்தன்மையான பழமைப் பற்று-மொழிப்பற்று - என்ற பெயராலும் குறுக்கிடலாகாது,''[37] என்று வேண்டுகிறார்.

இனி, ''போதுமா' என்று வாதிப்பதைவிட இதையாவது இனியும் காலதாமதம் செய்யாது, முன்பு போல இன்னொரு அரை நூற்றாண்டு கழிக்காது எப்படியேனும் விரைவில் செயல் படுத்துவது' என்பதையே குறிக்கோளாகக் கொண்டு முயல வேண்டும்.''[38] என்று வா. செ. குழந்தைசாமி குறிப்பிடுவதும் பொருந்துவதாக இல்லை; முழுமையில்லை.

### எழுத்துகள் அமையும் வகை:

எழுத்துகள் கீழ்க் காணுமாறு நான்கியலில் பொருந்தி யமைய வேண்டும்.

''1. மொழியியல் நோக்கு: மொழியின் அமைப்பைத் (அதாவது எழுத்து அமைப்பை) தெளிவாகவும் சீராகவும் எளிமையாகவும் அந்த மொழியின் எழுத்துக்கள் காட்ட வேண்டும்.

2 கல்வியியல் நோக்கு: மொழியைப் படிப்பதற்கும் எழுதுவதற்கும் கற்றுக் கொள்ள, முயற்சி எளிமையு டையதாய், காலதாமதம் ஆகாமல் செய்யும் நிலை யில் அமைந்திருக்க வேண்டும்.

3. உளவியல் நோக்கு: எழுதும்போதும் படிக்கும் போதும் நடக்கும் மனமுயற்சி, உடல் முயற்சி ஆகிய வற்றைப் எளிமையாக்கும் முறையில் அமைந்திருக்க வேண்டும்.

4. பொறியியல் நோக்கு: தட்டச்சு, தொலையச்சு, அச்சு வாகனத்தில் பலமுறை ஆகியவற்றை எளிய முறையில் அமைக்கும்படி வரிவடிவம் அமைந்திருக்க வேண்டும்.

இவை நான்கும் விஞ்ஞானரீதியான கோட்பாடுகள். ஆனால் ஒரு மொழியில் எழுத்து என்பது, அந்த மொழிச்

சமூகத்தின் கலாச்சாரத்தோடு நெருங்கிய தொடர் புடையது.''[39]

## இவ்வகையுள் தொழிலியல் (பொறியியல்) நோக்கில்:

1. அச்சுக் கோர்ப்பு
2. மின்னியல் அச்சுக் கோர்ப்பு
3. நிழற்பட அச்சுக் கோர்ப்பு
4. தட்டச்சுப் பொறி
5. மின்னியல் தட்டச்சுப் பொறி
6. கணிப் பொறி
7. பிராட்மா அச்சு
8. தொலை அச்சு
9. தொலைத் தட்டச்சுப் பொறி
10. தந்தி
11. காசோலை எழுதும் பொறி

ஆகிய இவையனைத்துக்கும் ஈடுகொடுக்கும் வகையில் தமிழ், எழுத்துச் சீர்திருத்தம் பெறுதல் வேண்டும்.

''தமிழில் 12 உயிர், 18 மெய், 1 ஆய்தம் என்ற 31 அடிப் படை எழுத்துக்களும் 216 உயிர்மெய் என்ற ஒருவகைக் கூட் டெழுத்தும் இருக்கின்றன. இந்த எழுத்துக்களைக் கையால் அச்சுக் கோர்க்கும் இயந்திரங்களில் அச்சுக் கோர்க்க 131 வடி வங்கள் தேவைப்படுகின்றன. அவைகளைப் போடப் பெரிய பெட்டி வேண்டியிருப்பதோடு ஒரே ஆள் எளிதாக கோர்க்க முடியாமலும் இருக்கிறது. அது போலவே, ஆங்கிலத் தட்டச் சில் 46 சாவிகள் மட்டுமே இருக்க, தமிழ்த் தட்டச்சில் 46 சாவி களும் 68 தட்டுகளும் (இங்கு ஜ, ஷ, ஸ எழுத்துக்களும் சேர்ந் தது) தேவைப்படுகின்றன. அதனோடு தமிழ் எழுத்துக்களை தட்டச்சு செய்ய நிறுத்த சாவிகள் (Dead Keys) வேண்டியிருக் கின்றது. இதனால் எந்திர லாபம் குறைவாக உள்ளது. லினோ டைப் இயந்திரத்தால் ரோமன்எழுத்துக்களை ஒருமணி

நேரத்தில் 50 செண்டி மீட்டர் அச்சுக் கோர்த்தால் தமிழ் எழுத்தைக் கொண்டு 20 அல்லது 25 செண்டி மீட்டர்தான் அச்சுக் கோர்க்க முடியும் (கிருஷ்ணமூர்த்தி, 1978:6). அப்படியே தட்டச்சு செய்யும்போது ஆங்கில மொழிக்கும் தமிழ் மொழிக்கும் வித்தியாசம் மிக உள்ளது. ஆங்கிலத்தில் மேல் நிலைத் தேர்வுக்கு வேகம் ஒரு நிமிடத்தில் 45 சொற்கள் / 225 தட்டுக்கள். அதே நிலைத் தேர்வுக்குத் தமிழில் வேகம் 41 சொற்கள் / 205 தட்டுக்கள் (குழந்தைசாமி, 1978:25). எனவே, தமிழ் எழுத்துக்களைத் திருத்தி அமைத்துக் கொண்டு தொழிலியல் வேகத்தை அதிகரிப்ப மொழி வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படும்''[40] என்றுதொழிலியல் நேரக்கில் குறைகளைத் தொகுத்துச் சொல்கிறார் சண்முகம் அவர்கள்.

மேற்காணும் கருத்தில் 131 வடிவங்களில் தமிழ் நாட்டரசு பெரியார் நூற்றாண்டு விழா நினைவாக ஏற்றுக் கொண்ட திருத்த வடிவங்களைக் கழித்தால் இன்னும் தேவையானவை 124. தொன்மை நலஞ்சான்ற தமிழ்மொழிக்கு 124 வடிவங்கள் என்பது மிகையே. ஆகவே இவ்வெண்ணிக்கையும் குறைய வேண்டும்.

## எழுத்துக் கோட்பாடு:

1. ஓர் ஒலிவடிவத்துக்கு ஒரு வரிவடிவம்.
2. எழுத்தில் தெளியும் சீர்மையும் எழுதும்போது விரைவும் இருத்தல் வேண்டும்.
3. கையால் எழுதும் வரிவடிவையே அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும். இதனால், ஓரெழுத்தை எழுதத் தொடங்கியபின் கையை எடுத்து அல்லது நிறுத்தி, மீண்டும் எழுதி முடிக்கும் நிலை கூடாது. தொடங்கி முடிப்பதால் விரைவு கிடைக்கும்.

தமிழில் எழுத்துகள் எத்தனை என்று கேட்டால் 247 என்று விடை வருமாறு உயிர்மெய்க்கும் வரிவடிவம் கொடுத்து விட்டனர். சார்பெழுத்துகள் இலக்கண ஆசிரியரால் பலவாறு கூறப்பெற்றன. தொல்காப்பியரால் மூன்றென்பது. நன்னூலாரால் 369 என்பது. தமிழ்விடுதூது ஆசிரியரால் 240 என்பது. இவையெல்லாம் முதலெழுத்துகளைச் சார்ந்து பிறப்பதால் சார்பெழுத்துகளே. இவையனைத்தும் தனித்தனி வரிவடிவம் பெற வேண்டுவதின்று. உயிர்மெய் என்னும் ஒரு வகைச் சார்பெழுத்துக்கு மட்டும் வரிவடிவம் கொடுத்ததால் 216 எழுத்துகள் எண்ணிக்கை கூடுதலாகப் பெற்றன. உயிரும் மெய்யும் கூடி உயிர்மெய் ஆகிறது என்பதால், வரிவடிவமும் கூடிவருவதாகக் காட்டிவிட்டால் எளிதாகிவிடும். உயிரினும் இரண்டிரண்டு வரிவடிவங்கள் பெற்றுள்ளமையைக் களைந்து ஒவ்வொரு வரிவடிவம் கொடுத்தல் நன்று. ஆகையால் ஓரொலிக்கு - ஒலி எழுத்துக்கு - ஒரு வரிவடிவம் என்பது நிலையான கொள்கையாவது சிறப்பே.

எழுத்து கற்போர்க்குத் தெளிவுண்டாகுமாறும் சீர்மையுடையதாயும் எழுதுதற்கு முயற்சிக் குறைவாக அமைந்து எளிமையுடையதாயும் விரைவில் எழுதி முடிக்கக் கூடியதாயும் இருத்தல் இன்றியமையாதது.

'' எழுத்தைப் பயன்படுத்துவார் பார்க்க, படிக்க, நினைவில் வைத்துக்கொள்ள, எழுத, எழுதுவிக்க, எளிதாக இருக்கவேண்டும், '' என்பார் பாலசுந்தரம்.[41]

தமிழ் எழுத்து அமைப்பு :-

1. குறிலுக்கும் நெடிலுக்கும் ஒலிவடிவில் ஓரியைபு இருப்பது போல் வரிவடிவிலும் இருத்தல் வேண்டும்.

2. ஓரெழுத்தை எழுதத் தொடங்கி முடிக்கும்வரை கையை எடுக்காமல் எழுதவேண்டும். அதனால் விரைவு கிட்டும். ஆகையால் மெய்யின்மேல் புள்ளியை நீக்கிடல் வேண்டும்.

3. சுழித்துத் தொடங்கினாலோ சுழித்து முடித்தாலோ விரைவு கிட்டும். வலமாக சுழித்துச் செல்வதும் எளிமை யாக அமையும். மரபு வழிப்பட்டதுமாகும்.

4. ''மெய்யின் வழித்தே உயிர்தோன்று நிலையே'' என்பத தற்கேற்ப மெய்வடிவம் முன்னும் உயிர்க்குறி பின்னும் அமைதல் வேண்டும்.

5. உயிரையும் மெய்யையும் பிரித்து, உயிர்மெய்யைக் காட்டல்வேண்டும். அதனால் வரிவடிவ எண்ணிக்கை குறையும்.

6. உயிர் நெடிலுக்கும் தனிவடிவம் வேண்டுவதில்லை என்பார் கருத்தை மறுக்கின்றோம். உயிர்நெடிலுக்கும் உயிர்மெய் நெடிலுக்கும் ஒரே வடிவு அமையுமெனின் உயிர் என்னும் மதிப்பே குறையுமென்க. வேறுபாடும் தெரியாதொழியும்.

உயிரெழுத்துக்குப் பதிலாகக் குறியீடுகளைக் கொள்வ தாலும் குறியீடுகளுக்குப் பதிலாக உயிரெழுத்துகளையே கொள்வதாலும் சொல்லில் உயிரெழுத்து, உயிர்மெய்யெழுத்து வேறுபாடு தெரியாது குழப்பத்தையே விளைவிக்கும்.

ஆகவே தெளிவு கருதி உயிர், மெய், உயிர்க்குறியீடு, ஆய்தம் என்று நான்குவகை வடிவங்கள் அமைவதே சிறப்பு ஆகும்.

பரிந்துரைகளும், நிறை குறைகளும்:-

இதுவரை முருகப்பா, பெரியார், ரங்காசார்யா, நமச்சிவாய முதலியார், பொற்கோ, கிருஷ்ணமூர்த்தி, கலைமணி, கொடு முடி சண்முகம், கொடுமுடி சண்முகப் பிரகதம், தெ. பொ. மீ., திருமலை முத்துச்சாமி, பேனாஓட்டி, சிரம்பான் பரமசிவா னந்தம், குழந்தைசாமி, நல்லதம்பி, மு.வ., புலவர் குழந்தை, வே. தில்லைநாயகம், சுந்தர், இராசகோபாலன், மகாதேவன், ஆதித்தர், ஞானதேமா, வி. கே. தில்லைநாயகம், சுப. நாரா யணன் முதலானவர் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி

ஆராய்ந்து, திருத்த வடிவங்களைப் பரிந்துரைத்துள்ளனர் என அறிகின்றோம். மேலும் செ. வை. சண்முகம், இரா. பால சுந்தரம், மு. உலகநாதன், தங்கமணி போன்றோரும் ஆராய்ந் துள்ளனர்.

இவர்கள் பரிந்துரைகளில் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதும் இன்ன இன்ன எழுத்துகள் திருத் தப்படவேண்டும் என்பதும் இவ்வகை திருத்தம் என்பதும் சிறப் புடன் காணப்படுகின்றன. எல்லாப் பரிந்துரைகளும் உயிர் மெய் வடிவங்களின் இகர, ஈகார, உகர, ஊகாரக் குறியீடு களைப் பிரித்து மெய்யையும் உயிர்க்குறியீட்டையும் தனித் தனியே காட்டவேண்டுமென்கின்ற நிறையுடையன.

ஆயினும் சில குறைபாடுகளும் வெளிப்படுகின்றன:—

1. சில பரிந்துரைகள் தெளிவும் சீர்மையும் இல்லாதன; எளிமையும் இல்லாதன.
2. அா, இா, உா, எா, அய், ஒா, அவ் எனத் திருத்தம் செய்வது ஓரொலிக்கு ஒருவடிவம் என்னும் கொள்கைக்கு முரணாகின்றது.
3. இப்போதிருக்கும் சில உயிரெழுத்துகள் எளிமையில்லா திருத்தலைத் திருத்தவில்லை.
4. அகரக் குறியீடு இல்லை. (தெ. பொ. மீ.)
5. மெய்க்கு மேற்புள்ளி இடப்படுகின்றது. (குழந்தை)
6. உயிர் எழுத்துகளையே உயிர்க் குறியீடுகளாக அமைப்ப தால் உயிர்க்கும் உயிர்க்குறியீட்டிற்கும் வேறுபாடு தெரியாது ; குழப்பமே நேரிடும். (மகாதேவன்)
7. ஓரொலிக்கு இரண்டும் மூன்றும் வரிவடிவங்கள் அமை கின்றன. மெய்க்கு முன்னும் பின்னும் உயிர்க்குறியீடு அமைகின்றது. (நல்லதம்பி)
8. ஓரொலிக்கு மூன்று நான்கு வரிவடிவங்கள். (மு. உலகநாதன்)

9. ஒரு குறியீட்டுக்கு இரண்டு வரிவடிவம் தரப்பட்டுள்ளன. (கன்னங்குறிச்சி தங்கமணி)

10. ஒலிவடிவுக்கேற்ப வரிவடிவு இயைபு இல்லை. (தில்லை நாயகம்)

11. பன்னீருயிர்க்கும் வரிவ்டிவம் இல்லாது பத்து உயிர்க்கே வரிவடிவம் தரப்பட்டுள்ளது. பன்னீருயிர்க்கும் தனித் தனியே உயிர்க்குறியீடு இல்லாமை. (கோதண்டராமன்)

12. குழந்தைசாமி முறையில் புள்ளியும் கோடுகளும் நிறைந்து குழப்பம் தருகின்றன.
இதுபற்றிச் சண்முகம் அவர்கள்,

1. ''ஒரு ஒலியுடைய உயிரெழுத்துகளும் தனி மெய்யும் இரண்டு வடிவங்களாகவும் இரண்டு ஒலி களையுடைய அகர உயிர்மெய் ஒரு வடிவமாகவும் அமைப்பானேன்?

2. அகரவுயிர்க்கு ஒருவடிவம் ஏனையவற்றிற்கு இரண்டு வரிவடிவம் அமைப்பானேன்?

3. பொறியியல் நோக்கில் ஒரு பிரச்சினையைக் கிளப்பு கிறது. புள்ளியை மேலே வைக்கத் தட்டச்சில் நிறுத்தச் சாவி தேவைப்படும். அதே தொல்லை மானோ டைப் லினோ டைப் அச்செழுத்திலும் தொடரும். இது வேகத்தைக் குறைக்கும்''[42] என்று குறிப்பிடுகின்றார்.

13. மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல்துறை எழுத்துச் சீரமைப்பும் உயிர்க் குறியீடுகளுக்கு மேல்புள்ளி யும், ஓரொலிக்கு இருவடிவமும் கொண்டுள்ளது.

14. அண்மையில் குழந்தைசாமி எழுதிய 'தமிழ் எழுத்துச் சீரமைப்பு - 3' என்னும் கட்டுரையில் காட்டப்பெற்ற சீரமைந்த எழுத்துகளிலும், இச்சீரமைப்பு எழுத்துகளால் கம்ப்யூட்டர் மூலம் எழுதப்பட்ட ஒரு பத்தியிலும் மேல் புள்ளியும் பக்கவாட்டில் காலும்[43] 'அறிவியல் யுகத்தில்

தமிழ் ' என்ற கருத்தரங்கில் பரிந்துரைக்கப்பட்ட எழுத்து களில் லேல்புள்ளி பக்கவாட்டில் புள்ளியாகவும்[44] காட்டப் பெற்றுள்ளன. இவற்றுள் ஓரொலிக்கு இரண்டு வடிவ மும் இரண்டொலிக்கு மூன்று வடிவமும் அமைந்துள்ளன. எழுதுகோலை எடுத்து மீண்டும் புள்ளி வைக்கவேண்டும். ஆகையால் இவை முழுமையான சீர்திருத்தம் ஆகா.

உயிர்க்கணத்தில் ஐ, ஔ நிலை :—

எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரில் ஐ, ஔ என்னும் ஒலிவடிவங்களை நீக்க முயல்கின்றனர், பெரியோர் சிலர்.

'' அவ்வழிப்
பன்னீருயிரும் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும் ''[45]

'' ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப ''[46]

என்பவற்றுள் உயிரெழுத்துகள் பன்னிரெண்டு எனவும்

'' ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப ''[47]

என்பதனுள் ஐ, ஔ இரண்டும் மற்ற நெடில்போல் உயிர் நெட்டெழுத்தாகும் எனவும் தொல்காப்பியர் கூறுதலாலும்

'' உயிரு முடம்புமா முப்பது முதலே ''[48]

எனவும்

'' அம்முதல் ஈராறு ஆவி ''[49]

எனவும் நன்னூலார் கூறுதலாலும் ஐ, ஔ இரண்டும் உயிர் எழுத்துகளே. மேலும், தொல்காப்பியர் இவ்விரண்டையும் 'ஓரெழுத்து ஒருமொழி' என்றும் குறிப்பிடுகின்றார்.[50]

மேலும் நன்னூலார்,

'' அம்முன் இகரம், யகரம் என்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வொடு
உவ்வும் வவ்வும் ஔவோர் அன்ன''[51]

என்னும் நூற்பாவில் அஇ, அய் என்பனவும் அஉ, அவ் என்பனவும் கூடி நின்று - கூட்டொலியாக — ஒத்து இசைக்கும் என்று கூறினாரேயன்றி, அஇ, அய் எனவும் அஉ, அவ் எனவும் கூட்டொலியாக ஐ, ஔ ஒலிக்குமெனக் கூறினா ரில்லை.

ஐ, ஔ இரண்டையும் உயிர் எனவே கொண்டுள்ளனர் முன்னோர். அவை கூட்டொலியாக — கூட்டொலிபோல — ஒலிப்பதாகக் கொண்டாலும் உயிராகக் கொள்ளப்பட்டிருக் கின்றன. ஒலி நுட்பங்கண்டு போற்ற வேண்டுமே யொழிய நீக்கக் கூடாது.

ஐ, அய் என்பன நுணுக்கமாக ஒலி வேறுபாடு உடையன என்பதை உணர்தல் வேண்டும். இதைப்போலக் கை என்பதற்கும் கய் என்பதற்கும் நுண்ணிய ஒலி வேற்றுமை உண்டு, என்பதாலேயே ஐகாரத்தைச் சொல்லியதோடு, ஐகாரத்துக்கு அய் போலி எனக் கொண்டனர். ஔ, அவ் என்பனவும் அவ்வாறே.

ஐ, ஔ இரண்டையும் உயிர் வரிசையிலிருந்து நீக்குதல் பற்றி,

''மீண்டும் சொல்கிறேன், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரில் உயிர் எழுத்துக்களில் எந்த ஒரு எழுத்தையும் இழக்காமல் இருப்பது அவசியம்''[52] என்று ம. பொ. சி. அவர்களும்,

''எண்ணிக்கையைக் குறைப்பதில் நாட்டம் செலுத்தும் போது, வழக்கில் இருக்கும் எந்த ஒரு ஒலியையும் இழந்து விடாமல் மிகவும் கவனமாகச் செய்தல் வேண்டும்''[53] என்று பாலசுந்தரம் அவர்களும் சொல்வதை மறந்திடுதல் கூடாது.

சண்முகம் அவர்கள், '' உயிரில் 10 தான் கற்பிக்க வேண்டும். ஆனால் உயிர்மெய்யில், கை, சை என்ற வடிவம் இருப்பதால், மொத்தம் 11 உயிர்மெய் வரிசைகள் ஆகின்றன. ஆகவே உயிருக்கும் உயிர்மெய்க்கும் நேரடித் தொடர்பு

இல்லாமல் போய்விடுகிறது. அப்போது புதிதாக எழுத்தைக் கற்றுக்கொள்வோருக்குக் கொஞ்சம் குழப்பம் ஏற்படும்''[54] என்கிறார்.

இவ்விரண்டொலிகளையும் உயிர்க்கணத்திலிருந்து நீக்கியோரும் உயிர்மெய் வரிசையில் நீக்கினாரில்லை. பெரியார் திருத்திய இம்முறைபற்றிச் சண்முகம் அவர்கள் ''பெரியார் செய்த முக்கிய சீர்திருத்தங்கள் இரண்டு: 1. கூட்டுயிர்களைக் (ஐ, ஔ) கூட்டெழுத்தாகக் கொண்டு, இரண்டு உயிர் எழுத்துக் களைக் குறைத்தது. 2. ஆகார ஐகார உயிர்மெய் வரிசை களில் ஒரே மாற்று வடிவத்தை முறையே ா, ை என்று எல்லா மெய்களோடும் சேர்த்தது. இதில் ஒரு குறை இருப் பது குறிப்பிடத் தக்கது. அதாவது, ஔகார உயிரை நீக்கியது. ஐகார வரிசையில் மட்டும் உயிரைப் போல உயிர்மெய்யைக் கூட்டெழுத்தாக ஆக்காமல் துணை எழுத்தாக வைத்துக் கொண்டது கல்வி நோக்கில் குழப்பம் விளைவிக்கும் தன்மை யது. அதாவது 'ை' என்ற மாற்று வடிவத்தின் மூல வடிவம் அல்லது எழுத்து எது? என்ற வினா எழும். உயிரில் பத்து எழுத்தையும் உயிர்மெய்யில் பதினொரு எழுத்தையும் கற்கும் படி நேருவதால், உயிர்க்கும் உயிர்மெய்க்கும் ஒன்றற்கொன்று நேரடித் தொடர்பு இல்லாமல் அமைந்து, கற்போர்க்குக் குழப்பம் ஏற்படும்.''[55] என்று கூறுகின்றார்.

''அய், அவ் ஆகியவற்றைப் போலி எழுத்துக்கள், கொள்ளற்க'' என்று எச்சரிக்கின்றனர் இளம்பூரணரும் நச்சி னார்க்கினியரும் தமது உரை வாயிலாக.[56]

பிற எழுத்தின் உதவியின்றித் தனித்து, மற்ற உயிர் களைப் போலவே ஒலிப்பன ஐ, ஔ இரண்டும். அய், அஇ எனவும் அவ், அஉ எனவும் ஈரொலிகள் கூடினால் அவ் விரண்டின் போலிகளாக ஒலிக்கும் என முன்னோர் சொன் னதை மாற்றி அப்போலிகளே ஐ, ஔ என்னும் உயிராயின எனக் குழம்புகின்றோம். போலிகளை மெய்யொலிகளாக— கூட்டொலிகளாக – சேர்க்கையொலிகளாகக் கொண்டு இரண் டிரண்டு வடிவங்களைக் கொடுக்க முயல்கின்றோம்.

ஐகார, ஔகாரங்கள் ஏனைய நெடில் போலவே அளபெடுக்கும் நெட்டுயிர்கள் எனவும் தொல்காப்பியர் கூறுகின்றார். அளபெடுத்தன வென்பதற்கு அடையாளமாக முறையே இ, உ என்னும் குறில்கள் அருகே எழுதப்பெறும்.

இவை உயிரும் மெய்யுமாக ஒலிக்கவில்லை என்ற ஒலிப்பு நுண்மையை நன்குணரல் நன்று. அய், அவ் என எழுதின் ஓரொலி எழுத்து என அமையாது, யகர வகர மெய் ஈறாக அமைந்த ஈரொலி எழுத்து கொண்ட சொல் எனக் கொள்ளவும் கூடும்.

ஐ என்பது சொல்லாகும்போது அழகு, வியப்பு, தலைமை முதலிய பொருள்களைத் தரும். இவ்வைகார ஒலியை 'அய்' என எழுதின் அப்பொருள்களைத் தருமோ என ஐயுற வேண்டியுள்ளது.

இவ்வேதுக்களால் ஐ ஒலிக்கு வடிவமாக 'அய்' என யகர யீறாக வடிவமைப்பது பொருந்துவதன்று.

அறிஞர் தெ. பொ. மீ. யும் ''இஃது(ஐ) அகரம் முன்னும் இகரம் பின்னுமாக ஒற்றித்து ஒலிக்கின்ற ஈருயிர் ஓரொலி எழுத்தாம்... இடையில் எவ்வாறாயினும் மொழி முதலில் முற்ற முடிய ஈருயிரும் இணைந்த ஓரொலியாகவே, ஐ என்பது தெள்ளத் தெளிய ஒலிக்கின்றது.''[57] என்கின்றாராகையால் 'ஐ' ஓரொலியேயாம்.

'ஔ' ஒலி, இதழ்கள் குவிவதால் தோன்றும். 'அவ்' ஒலி, மேற்பல் கீழ் இதழோடு பொருந்துவதால் தோன்றும். ஒலி வேறுபடுகின்றது. அதனால் அவ் என வகரயீறாக எழுதுதலும் பொருந்துவதன்று.

மொழியியல் அடிப்படையில் பார்த்தாலும் 'ஐ' 'ஔ' இரண்டொலிகளுக்கும் அய், அஉ என்பன மாற்றொலியன் —போலி—எனவேகொள்ளப்படும்' என்பதை வ. சுப. மாணிக்கம் தெளிவாக விளக்குகின்றார். அது வருமாறு:

''ஒலியன் ஆவது பொருளும் பிறப்பும் தெரிந்து தெளிந்த ஒலி முதற்கூறு. மாற்றொலியாவது பொருளும் பிறப்பும் ஒத்து வரவு (distribution) வேறு உடைய புடையொலி. போலியாவது பொருளும் வரவும் ஒத்துப் பிறப்பு வேறு உடைய மாற்றொலியன்; அஃதாவது ஓர் ஒலியன் நிற்குமிடத்து வேறு ஓர் ஒலியன் வரும். இது பொருள் மாற்றம் செய்யாது ஒலியை மட்டும் மாற்றி நிற்றலின் மாற்றொலியன் (Allophoneme) என்று பெயர் பெறும்.

அகர இகரம் ஐகாரம் ஆகும் — (தொல் ுக)
அகர உகரம் ஔகாரம் ஆகும் — (தொல் உஉ)

என்ற நூற்பாக்களால், 'ஐ' என்னும் ஓரொலியனுக்கு 'அஇ' என்னும் இரண்டொலியன்களும், 'ஔ' என்னும் ஓரொலிய னுக்கு 'அஉ' என்னும் இரண்டொலியன்களும் இணைந்து வந்து மாற்றொலியன் ஆகும்.

அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்'

(தொல் ருகூ)

இரண்டொலியன்கள் ஓர் உயிரொலியனுக்கு மாற்றாக, ஈடாக வருவதை மேலே கண்டோம். இந்நூற்பாவால் உயிரும் மெய்யும் (அய்) இணைந்து, ஐகாரத்தின் மாற் றொலியனாக வருவதைத் தனித்துக் காட்டுவர்.

'' இகர யகரம் இறுதி விரவும்'' (தொல் ருஅ)

என்பதனால் உயிரொலியனுக்கு மெய்யொலியன் மாற்றாக வருவது காண்க. இதுவரை விளக்கிய போலிகள் (அஇ, அஉ, அய், ய்) எல்லாம் தத்தமக்கு உரிய உயிரொலியன் களின் (ஐ, ஔ, இ) இசையோடு ஒத்திசைப்பவை; செவிப் புலனுக்கு ஓரன்ன ஓசை தருபவை, ''ஐயொத்து இசைக்கும்'', '' ஔவோரன்ன '' என்று பவணந்தியார் போலியின் இசை யொப்புமையை வெளிப்படுத்துவர். ''சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள் போல இசைக்கும் என எழுத்துப்போலி கூறுகின்றது'' என்பர் நச்சினார்க்கினியர்.''[58]

ஆகையால் அய், அவ் என்பன ஐக்கும் ஔவுக்கும் போலிகளே. இம்போலிகள் செய்யுளில் திரிந்தியனவாம்.

''அய்வனம் அய்யர் என்றாற் போல்வன செய்யுளில் எதுகை நோக்கி வரும் திரிபு வடிவங்களாகும்,'' என்பார் தேவநேயப் பாவாணர்.[59]

எனினும் இம்மாற்றொலியன்–போலி–ஆகக் சொள்வதும் தவறு; அவை தனித்தனி எழுத்துகளே என உறுதிப்படச் சொல்வாரும் உளர். ''ஐ, ஔ தனியெழுத்துகளே. அஇ, அஉ எனப் போலி கொள்ளுகல் தவறு. ஆங்கிலத்தில ஓ கூட்டெழுத்தன்று; அதுபோலவே ஐயும்,'' என்பார் வி. பொ. பழனிவேலனார்.[60]

ஆகவே ஐ, ஔ இரண்டையும் பிற உயிர்களைக் கொள்வது போலவே வரிவடிவம் திருத்தி வைத்துக் கொள்ளல் நன்று.

இனி, உயிர்கள் வரிவடிவத் திருத்தம் :-

1. அ, ஆ, உ, எ, ஏ ஆகிய எழுத்துகளை கொள்வோம்.

2. இ, ஈ, இரண்டும் ஒப்புமையும் சீர்மையும் இல்லாதன. மேலும் எழுத எளிமையில்லாதன. முயற்சி மிகுதியும் வேண்டியுள்ளது. ஆகையால் மாற்றம் வேண்டும்.

'இ' எழுதச் சுழித்துத் தொடங்கிச் சற்று நீட்டிய நிலையே போதுமானது. '૭' என அமையும்.

'ஈ' - இகரப் புது வடிவமாகிய '૭' என்பதன் இறுதியில் சுழித்து நிறுத்தலாம். '૭' என அமையும்.

3. ஊ - இரண்டு வரிவடிவம்; நீக்கப்படல் வேண்டும். பரிந்துரைக்கப்பட்டவற்றுள் திருமலை முத்துசாமியின் பரிந்துரை ஏற்கக்கூடியது; 'ஊ' என்பது அது. அதனை மேலும் திருத்தலாம். உ எழுதி இறுதியில் சுழித்து மேலேற்றி நிறுத்தலாம், 'ஊ' என அமையும்.

4. ஐ - எளிமை இல்லை. இதனை நெடுக்கில் வெட்டி மேல் பகுதியை இறுதியில் சுழித்து நிறுத்தலாம். 'ஊ' என அமையும்.

5. ஒ, ஓ - இரண்டும் எழுதுவதற்கு எளிமையில்லாதன; அதனால் வேறு வடிவம் அமைதல் வேண்டும். 'ஏ', 'ஏ' என அமையும்.

6. ஔ - இரண்டு வரிவடிவம்; நீக்கப் பெறல் வேண்டும்; எளிமைப் படுத்தப்படல் வேண்டும். '൳' என அமையும்.

ஆய்த எழுத்து :

முப்புள்ளி வடிவாக இருத்தலால், ஏற்படும் முன் சொன்ன குறைகளை நீக்கத் திருத்தம் வேண்டும். 'ஃ' என்று ஏற்கலாம்.

மெய் எழுத்துகள் :

1. மெய் எழுத்துகளைப் புள்ளி நீக்கியே எழுதுதல் நன்று.
ஏனெனில் எழுதத் தொடங்கிப்பின் நிறுத்தித் தனியே புள்ளி இட வேண்டியுள்ளது. அதனால் காலம் வீண் ஆகிறது. மேலும்,
தட்டச்சில் புள்ளிக்காகத் தட்டுதலினால் காலம் வீணாவதோடு தாளும் பொத்துக் கொள்கின்றது. அதனால் அகர உயிர்மெய் யாக இதுகாலம் வரை எழுதிய வரிவடிவத்தை மெய்யாகவே கொள்ளலாம். க, ங, ச, ஞ.

2. மெய்யெழுத்துகளில் ஞ், ந் என்பனவற்றின் கீழ் விலங்கையும் கீழ் நீட்டலையும் குறைத்து ஐ, ந எனக் கொள்ளலாம்.

3. 'ண' நீளமாக அமைந்துளது. குறைக்க 'ண' என அமைக்கிறோம்.

4. 'ர்' என்பதை 'ர்' எனத் தவறாக எழுதுவதைத் திருத்தமாக 'ர' எனக் கொள்ளலாம்.

உயிர்க்குறியீடுகள் :

உயிர்க் குறியீடுகள் உயிர் மெய்களுக்கே வேண்டுவன. இவை மெய்யின் வழியதாகத் தனியே எழுதப் பெறல் வேண்டும். இதனால் கற்பார்க்கு எளிமையாக எழுதும் முறை வாய்க்கும். எழுதுமிடம் கூடினாலும் மன முயற்சிக்கும் உடல் முயற்சிக்கும் விரைவு கிடைக்கும்.

1. புள்ளி நீங்கிய வடிவே மெய்யெனக் கொண் டதாலும் உயிர்மெய் என்பது உயிரும் மெய் யும் என்னும் இரண்டு ஒலிகள் ஆதலாலும்

ஓரொலிக்கு ஒரு வடிவம் என்பது கொள்கையாதலாலும் அகரமேறிய உயிர்மெய்க்கும் ஒரு புது உயிர்க்குறியீடு தேவை. அதை 'ɾ' எனக் கொள்வோம். இதனால் எண்ணிக்கை கூடுமோ எனில் கூடாது. இப்போதுள்ள உயிர்க்குறியீடுகள் 14. புதிய உயிர்க்குறியீடுகள் 12. ஆகையால் இன்றைய வடிவங்களின் எண்ணிக்கையிலும் குறைவே ஆகும்.

2. ஆகார உயிர்க் குறியீடு இப்போது வழங்கும் காலே (ா) இருக்கலாம். அகர உயிர்க்குறியீடாகிய 'ɾ' என்பதனை வலப்புறத்தில் மற்றுமொரு கோட்டினைக் கீழ்நோக்கி இழுத்து 'ா' என எழுதுகின்றோம்.

3. இகர, ஈகார உயிர்க்குறியீடுகளாக மற்றவர் பரிந்துரைத்த குறிகளைச் சற்று நீட்டி அமைப்போம். 'ዓ', 'ዖ' என அமையும்.

4. உகர, ஊகார உயிர்க்குறியீடுகளாக மற்றவர் பரிந்துரைத்தவை தெளிவும், எளிமையுமில்லாதன. மாற்றாக '⌋', '⅃' என அமைக்கிறோம்.

5. எகர, ஏகார உயிர்க்குறியீடுகளாக இப்போது வழங்குவனவற்றையே மு. வ. காட்டியது போல மெய்க்குப் பின்பு அமைப்போம். கெ, கே என அமையும்.

6. ஐகாரக் குறியீடு முன்பிருக்கும் 'ை' என்பது ணையெழுத்தில் 'ண' என்பதனோடு இயைபுடையதாகிறது. வேறுபாடு வேண்டும். அது 'ര' என அமையும்.

7. ஒகர, ஓகார உயிர்க்குறியீடுகள் மூன்று வடிவங்கள், நீக்கப்படல் வேண்டும். வேறு வடிவங்கள் வேண்டும். அவை 'ə', 'ə̈' என அமையும்,

8. ஔகார உயிர்க்குறியீடு மூன்று வடிவங்கள்; நீக்கப்படல்வேண்டும். வேறு ஒரு வடிவம் வேண்டும். அது ' ' என அமையும்.

இக் குறியீடுகள் சில மற்றவர்களால் பரிந்துரைக்கப்பெற்றன. எளிமையும் தெளிவும் கருதி உயிர்களுக்கு மாற்றியும் நிலைமாற்றம் செய்தும் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய உயிரெழுத்துகள் எல்லாம் சுழித்துத் தொடங்கி வலம் எழுதுமாறு அமைகின்றன.

உயிர்க்குறியீடுகள் சுழித்தோ சுழிக்காமலோ வலமாக அமைகின்றன. சில இறுதியில் சுழிக்கப்படுகின்றன.

மெய்கள் எல்லாம் பெரும்பாலும் சதுரவடிவமாக அமைந்து வழக்கிலிருக்கின்றன. அவற்றுள் சில சுழித்துத் தொடங்குவனவாகவும் அமைந்துள்ளன.

மாணவர் கையால் எழுதக் கற்கும் காலத்தில் இவை மிக எளிமையாக அமையும். 0,6,9,ஒ,6 இவ்வாறு சுழிக்கக்கற்றுப் பின் சுழியோடு வலம் நீட்டவும் வளைக்கவும், அகர ஆகார உயிர்கட்கும் மெய்கட்கும் செங்குத்துக் கோடாக இழுத்து, மேலும் கீழும், வலமும் நீட்டவும் வழக்கப்படுத்திக் கொள்ள, மனதுள் நிலைநிறுத்திக் கொள்ள வாய்ப்பாக அமைகின்றன

பழமையும். புதுமையும்:

உயிர் :

பழைய வடிவம் ;

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

புதிய வடிவம் :



மெய்கள் :

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

ஆய்தம் :

' ஃ '

உயிர்க்குறியீடுகள் :

உயிர் :

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

உயிர்க்குறியீடுகள் :

ா ா ி ீ ு ூ ெ ே ை ொ ோ ௌ

உயிர் மெய்கள் :

க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ

க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ

ங ஙா ஙி ஙீ ஙு ஙூ ஙெ ஙே ஙை ஙொ ஙோ ஙௌ

ங ஙா ஙி ஙீ ஙு ஙூ ஙெ ஙே ஙை ஙொ ஙோ ஙௌ

ச சா சி சீ சு சூ செ சே சை சொ சோ சௌ

ச சா சி சீ சு சூ செ சே சை சொ சோ சௌ

ஞ ஞா ஞி ஞீ ஞு ஞூ ஞெ ஞே ஞை ஞொ ஞோ ஞௌ

ஞ ஞா ஞி ஞீ ஞு ஞூ ஞெ ஞே ஞை ஞொ ஞோ ஞௌ

ட டா டி டீ டு டூ டெ டே டை டொ டோ டௌ

டr டா டๆ டᶠ டɹ ட∂ டണ டே டӨ டә டஒ டஸ

ண ணா ணி ணீ ணு ணூ ணெ ணே ணை ணொ ணோ ணௌ

ணr ணா ணๆ ணᶠ ணɹ ண∂ ணണ ணே ணӨ ணә ணஒ ணஸ

த தா தி தீ து தூ தெ தே தை தொ தோ தௌ

தr தா தๆ தᶠ தɹ த∂ தണ தே தӨ தә தஒ தஸ

ந நா நி நீ நு நூ நெ நே நை நொ நோ நௌ

நr நா நๆ நᶠ நɹ ந∂ நണ நே நӨ நә நஒ நஸ

ப பா பி பீ பு பூ பெ பே பை பொ போ பௌ

பr பா பๆ பᶠ பɹ ப∂ பണ பே பӨ பә பஒ பஸ

ம மா மி மீ மு மூ மெ மே மை மொ மோ மௌ

மr மா மๆ மᶠ மɹ ம∂ மണ மே மӨ மә மஒ மஸ

ய யா யி யீ யு யூ யெ யே யை யொ யோ யௌ

யr யா யๆ யᶠ யɹ ய∂ யണ யே யӨ யә யஒ யஸ

ர ரா ரி ரீ ரு ரூ ரெ ரே ரை ரொ ரோ ரௌ

ரr ரா ரๆ ரᶠ ரɹ ர∂ ரണ ரே ரӨ ரә ரஒ ரஸ

ல லா லி லீ லு லூ லெ லே லை லொ லோ லௌ

லr லா லๆ லᶠ லɹ ல∂ லണ லே லӨ லә லஒ லஸ

வ வா வி வீ வு வூ வெ வே வை வொ வோ வௌ

வr வா வๆ வᶠ வɹ வ∂ வണ வே வӨ வә வஒ வஸ

ழ ழா ழி ழீ ழு ழூ ழெ ழே ழை ழொ ழோ ழௌ

ழr ழா ழ१ ழ° ழ⌋ ழ⅃ ழ6 ழC ழ෬ ழ૭ ழ૭ ழ෩

ள ளா ளி ளீ ளு ளூ ளெ ளே ளை ளொ ளோ ளௌ

ளr ளா ள१ ள° ள⌋ ள⅃ ள6 ளC ள෬ ள૭ ள૭ ள෩

ற றா றி றீ று றூ றெ றே றை றொ றோ றௌ

றr றா ற१ ற° ற⌋ ற⅃ ற6 றC ற෬ ற૭ ற૭ ற෩

ன னா னி னீ னு னூ னெ னே னை னொ னோ னௌ

னr னா ன१ ன° ன⌋ ன⅃ ன6 னC ன෬ ன૭ ன૭ ன෩

ஆகப் புதிய தமிழ் எழுத்துகள் :

| | |
|---|---|
| உயிர் | 12 |
| மெய் | 18 |
| உயிர்க்குறியீடு | 12 |
| ஆய்தம் | 1 |
| | 43 |

247 ஒலியெழுத்துகளைக் குறிக்க 43 வரியெழுத்துகள் போதும்.

நடைமுறைத் திட்டம் :

சிறுவர்களுக்கும் கற்றறிந்த பெரியோர்களுக்கும் புதிய எழுத்துகளை அறியப் பயிற்சியளித்தல் வேண்டும். நீண்ட காலத் திட்டம் வகுத்துச் செயல்படுத்தல் நன்று.

1. இந்த ஆராய்ச்சி மாநாட்டு முடிவை, செயற்குழு தமிழ் நாட்டரசு ஏற்குமாறு செய்தல் வேண்டும். அவ்வரசே பெரியார் நூற்றாண்டு விழாத் தொடர்பாகத் திருந்திய எழுத்துகளைப் பற்றி அரசாணைமூலம் நிறைவேற்றி யதைப் போல இச்சீர்திருந்திய எழுத்துகளையும் ஏற்று அரசாணை வெளியிடல் வேண்டும்.

2. அதன்பின்பு, செய்தியிதழ்கள் மூலம் விளம்பரம் வெளியிடல் வேண்டும்.

3. செய்தியிதழ்களே குறிப்பிட்ட காலம்வரை தொடர்ந்து நாள்தோறும் சீர்திருந்திய எழுத்து வடிவங்களைப் பெட்டிச் செய்தியாக வெளியிடல் வேண்டும். புதிய எழுத் துகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

4. சுவர், பதாகை போன்ற விளம்பரங்களில் இவ்வெழுத்து களைப் பயன்படுத்தத் தூண்டுதல் வேண்டும். வணிக நிறுவனப் பலகைகளில் இவ்வெழுத்துகளைப் பயன் படுத்தத் தூண்டுதல் வேண்டும்.

5. படிப்படியாகப் பாடநூல்களில் ஏற்றல் வேண்டும்.

6. இறுதியாக, நூல்களை அச்சேற்றும்போது நூல்களில் பயன்படுத்தல் வேண்டும்.

7. முந்திய நூல்களைப் புதிய எழுத்துகளோடு புதுப்பித்தல் வேண்டும். இதற்காகத் தமிழ்ப்பேசும் பிறநாட்டு அரசு கள், அமைப்புகளிடமிருந்து நிதி பெறலாம்.

**திருந்திய எழுத்துகளை நடைமுறைப்படுத்தல் :**

1. இகரம், ஈகாரம், ஊகாரம்—ி, ீ, ூ—
   ஆகிய மூன்றினையும் மூன்று திங்கள் வரை.
2. ஐ, ஒ, ஓ, ஔ — ை, ெ, ே, ௌ—
   ஆகிய நான்கையும் அடுத்த மூன்று திங்கள் வரை.
3. உயிர்க்குறியீடுகள்: ா, ா, ு, ூ, ு, ூ —
   ஆறினையும் அடுத்த மூன்று திங்கள் வரை.
4. குறியீடுகள்: ெ, ே, ை, ௌ—
   ஆகிய நான்கையும் அடுத்த மூன்று திங்கள் வரை.
5. மெய்யெழுத்துகள் : ஞ், ந், ண், ர் — ஞ, ந, ண, ர—
   ஆகிய நான்கையும் அடுத்த மூன்று திங்கள் வரை.
6. இ, ஈ, உ, ஊ ஆகிய உயிர்க்குறிகளைப் பிரித்து எழுதுதலைக் காட்டல் வேண்டும்.
7. உயிர்க்குறிகளை மெய்யின் பின்பு எழுதுதலைக் காட்டல் வேண்டும்.
8. உலகத்தின் அனைத்து நாடுகளிலும் வெளியாகும் தமிழ்ச் செய்தியிதழ்களோடும் தொடர்பு கொண்டு இம்முறையைக் கையாளத் தூண்டுதல் வேண்டும்.
9. வானொலிச் சொற்பொழிவு மூலம் மக்களைக் கவனிக்கச் செய்தல் வேண்டும்.
10. தொலைக் காட்சியில் திருந்திய வடிவங்களை எழுதிக் காட்டல் வேண்டும்.

இன்னொன்று :

இடைப்பிறவரல் என்றாலும் இன்றியமையாததொன்றையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

இற்றைப்போது, நாம் பிழைபட ச என்ற ஒலியை ஸ என்றே ஒலிக்கின்றோம். அதனால் பள்ளியிலேயே இளந் தலைமுறையினர்க்கு முறையாக ஒலிக்கப் பயிற்றல் வேண்டும்.

இதைப்போலப் பிற தமிழ் ஒலிகளையும் வரிவடிவங்களை யும் ஒலிக்கவும் எழுதவும் பயிற்றுவிக்கத் தொடக்கப் பள்ளி யாசிரியர்க்குப் பணியிடைப் பயிற்சி கொடுப்பது நலம் தரும்.

ஏற்கவேண்டல்:-

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் அவ்வளர்ச்சியால் வையகத் தமிழர்தம் வாழ்வு வளர்ச்சிக்கும் தமிழ் மூலம் தகவல் தொடர்பு வளர்ச்சிக்கும் இவற்றின் வளர்ச்சியால் அறிவியல் முன்னேற் றத்திற்கும் ஈடுகொடுக்கும் முறையில் தமிழ் எழுத்து அமைய வேண்டுமென்பதால், எளிமையும் சீர்மையும் தெளிவும் விரைவும் உடையனவாகத் தமிழ் எழுத்துகள் சீர்திருத்திப் பரிந்துரைக் கப் பெற்றுள்ளன. அறிஞர் உலகம் ஆராய்ந்து ஏற்பதாக.

தாமிழ மாழியும பிறா மஒழிகளைப பஒலா
அறிவியால பாயானைப பெறா வேணடுமனால
அவவாறிவியால நூககூடு எழுததும திருத
தாம பெறால வேணடும. அம முயாறசியில
பிறாரைப பஒலா கூடாபபிளளையும முயான
றிருககிறேன. நமமைப பஒலா எதிரகாலா மாக
களும ஒடாரபபாடா வேணடாம. பாணடையா
ஒலாககியாஙகளையும புதியா எழுததில
அசசறேறிக கஒளளாலாம. மானாமுனடலே
ஒடாமுனடு. அறிஞாரா உலாகாம தாமிழ
எழுததுச சீரதிருததாததை விரைவில நாடை
முறைபபடுததுவாதாகா.

நானறி.

முறறும

## அடிக்குறிப்புகள்

1. யாப்பருங்கல விருத்தியுரை, கடைசிச் சூத்திர உரை, உரையாசிரியர் எடுத்துக்காட்டு.
2. சண்முகம், செ. வை. டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம்.
3. பாலசுந்தரம், இரா. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பக்கம் 30.
4. சண்முகம், செ. வை. டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம்.
5. கலைக் களஞ்சியம், தொகுதி 2, பக்கம் 576.
6. காசிநாதன், நடன., திருச்சிராப்பள்ளி இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவைச் சொற்பொழிவு, 15–6–90.
7. கிருஷ்ணமூர்த்தி, இரா. சேரநாட்டில் தமிழ்வட்டெழுத்து, பக்கம் 35.
8. ஐராவதம் மகாதேவன், ‘சேரநாட்டில் தமிழ்வட்டெழுத்து’ நூலில் எடுத்தாளப் பெற்றது.
9. சுப்பிரமணியன், தி. நா. பண்டைத் தமிழ் எழுத்துக்கள், பக்கம் 58, 62.
10. ஆசிரியர் நேரில் கண்டு பேசியபோது.
11. குழந்தைசாமி, வா. செ., டாக்டர் ‘கல்வியுலகத்திற்குத் தமிழ்’ எடுத்தாளப் பெற்றது.
12. சம்பத்து, எம். டி., டாக்டர், மைசூர் தொல்லியல்துறை, கல்வெட்டுத்துறைக் கண்காணிப்பாளர், திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகச் சொற்பொழிவு 27–3–90.
13. இரா. கிருஷ்ணமூர்த்தி, பிற்காலத் தமிழ் வட்டெழுத்து, பக்கம் 57.
14. தொல், எழுத்து, புணரியல்–2.
15. தொல், எழுத்து, புணரியல்–3.
16. தொல், எழுத்து, நூன்மரபு – இரண்டாம் நூற்பாவுக்கு.

17. தொல், எழுத்து நூன்மரபு–2, அடிக்குறிப்பு–பக்கம் 20, கழகப்பதிப்பு.

18. சுப்பிரமணியன், தி. நா., பண்டைத் தமிழ் எழுத்துக்கள்- பக்கம் 60.

19. உலகத் தமிழ் மாநாடு – விழாமலர், சென்னை – 1968, 'தமிழ் எழுத்துக்கள்', மொழி 21.

20. தேவநேயப் பாவாணர், அடிக்குறிப்பு–தொல், எழுத்து, நூன்மரபு 17, நச்சினார்க்கினியருரை.

21. தொல், எழுத்து, நூன்மரபு–1 நச்சினார்க்கினியர் உரை.

22. மு. வ. டாக்டர், மொழி வரலாறு – பக்கம் 431.

23. கோவிந்தராசன், மு. 'மொழித்திறன்களும் சில சிக்கல் களும்' – பக்கம் 187.

24. இளவரசு, சோம., நன்னூல் சொல்லதிகாரம், காண்டி கையுரை – 'சுடர் பதிப்பகம்', சிதம்பரம்.

25. இறையரசன், பா., 'அச்சுத்துறை நோக்கில் எழுத்துச் சீர்திருத்தம்', ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், நவம்பர் 15–19, 1987, கோலாலம்பூர், மலேசியா.

26. நாகசாமி, இரா. ' தமிழ் எழுத்துக்கள் ' மொழி 32, உலகத் தமிழ் மாநாடு – விழா மலர் – 1968.

27. வேங்கடசாமி, மயிலை சீனி, ' பத்தொன்பதாம் நூற் றாண்டில் தமிழ் இலக்கியம் ' — பக்கம் 131.

28. சுப்பிரமணியன், தி. நா,, பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பக்கம் 62.

29. பண்டைத் தமிழ் எழுத்துக்கள் – பக்கம் 59.

30. ஹுல்ட்சு, டாக்டர், ' தென்னிந்திய சாசனங்கள் ' முதல் தொகுதியின் முகவுரை, எடுத்தாண்டவர்: வேங்கடசாமி, மயிலை சீனி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் – பக். 40 – 42.

31. உ. வே. சா., என் சரித்திரம் – பக்கம் 353. எடுத். தாண்டவர் ராமன், மு. கோ., ' சுவடியியல் பயிற்சி – கையேடு '.

32. தொல். எழுத்து, நூன்மரபு, முதல் நூற்பா, நச்சினார்க்கினியர் உரை. பக். 18, கழகப் பதிப்பு.

33. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை உயிரொ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய்.
— நன்னூல், எழுத்து 89.

34. மு. வ., டாக்டர். மொழி வரலாறு – பக்கம் 431–432.

35. கி. ஆ. பெ. வி., தமிழின் சிறப்பு – பக்கம் 15.

36. தொல், எழுத்து, முகவுரை – பக்கம் 22, கழகப் பதிப்பு – மறுபதிப்பு – 1979.

37. மு.வ., டாக்டர்.,எடுத்துக்காட்டியவர் இறையரசன்,பா. ' அச்சுத்துறை நோக்கில் எழுத்துச் சீர்திருத்தம் ' ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் – 1987.

38. ' தமிழ் எழுத்துச் சீரமைப்பு – 3 ', தினமணி, பிப்ரவரி 14, 1989.

39. சண்முகம், செ. வை., டாக்டர், எழுத்துச் சீர்திருத்தம் – பக்கம் 6.

40. ,, ,, ,, பக்கம் 29.

41. பாலசுந்தரம். இரா., தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பக்கம் 28.

42. சண்முகம். செ. வை., டாக்டர்., எழுத்துச் சீர்திருத்தம் பக்கம் 54–55.

43. 'அறிவியல் யுகத்தில் தமிழ்'-தினமணி சுடர், 13–8–1988

44. 'தமிழ் எழுத்துச் சீரமைப்பு–3', தினமணி, பிப்ரவரி 14, 1989.

45. தொல், எழுத்து – 84
46. தொல், எழுத்து – 8
47. தொல், எழுத்து – 4
48. நன்னூல், நூற்பா 59
49. ,, ,, 63
50. 'நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி' – தொல், எழுத்து, மொழி மரபு – 10.
51. நன்னூல், நூற்பா 125.
52. எழுத்துச் சீர்மை – பக்கம் 140.
53. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் – பக்கம் 34.
54. சண்முகம், செ. வை., டாக்டர். எழுத்துச் சீர்திருத்தம் – பக்கம் 225–226.
55. ,, ,, ,, ,, பக்கம் 34
56. தொல், எழுத்து, மொழி மரபு – 21, 22, 23 உரைகள்.
57. கலைக் களஞ்சியம், தொகுதி 2, பக்கம் 617.
58. மாணிக்கம், வ. சுப., 'மாற்றொலியன்', தெ. பொ. மீ. மணிவிழா மலர் 1961. பக்கம் 366–367.
59. தொல், எழுத்து, மொழி மரபு 23ஆம் நூற்பாவுக்கு அடிக் குறிப்பு – கழகப் பதிப்பு.
60. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 54, பக்கம் 96–97.
'எண்பதில் தமிழ்' என்னும் நூலில் எடுத்தாளப்பெற்றது.

---

# துணை நின்றவை

தொல்காப்பியம்

நன்னூல்

யாப்பருங்கல விருத்தியுரை

இலக்கண உலகில் புதிய பார்வை, பொற்கோ

எழுத்தின் கதை மு. வ.

மொழியின் கதை மு. வ.

கலைக் களஞ்சியம், 1-10 தொகுதிகள்

17–8–1988 நாளிட்ட 'தின மணி' இதழின் 'வாசகர் கருத்துக்கள்' பகுதியில் திருப்பத்தூர் (வ. ஆ.) ச. மு. விமலானந்தன்.

மொழித் திறன்களும் சில சிக்கல்களும், மு.கோவிந்தராசன்

சேர நாட்டில் தமிழ் வட்டெழுத்து, இரா. கிருஷ்ணமூர்த்தி

பிற்காலத் தமிழ் வட்டெழுத்து, இரா. கிருஷ்ணமூர்த்தி

தமிழுக்கு மீண்டும் ஒரு வடிவ மாற்றம், கன்னங்குறிச்சி தங்கமணி.

'விடுதலை'—தந்தை பெரியார் 96-ஆவது பிறந்த நாள் மலர்.

இக்கால மொழியியல், முத்துசண்முகம்.

ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், நவம்பர் 15-19-1987 கோலாலம்பூர், மலேசியா.

உலகத் தமிழ் மாநாடு, விழா மலர், சென்னை, 1968.

மொழி வரலாறு, டாக்டர் மு. வ.

களஞ்சியம், வளர்தமிழ் மன்ற வெளியீடு, அண்ணா பல்கலைக் கழகம்.

தமிழ்நாடும் மொழியும், திருமலை முத்துசாமி, அ;

எழுத்தியல், டாக்டர் சூ. இன்னாசி.

சிந்துவெளி எழுத்து வடிவங்கள்,
டாக்டர் க. த. திருநாவுக்கரசு.

தமிழ் மொழி வரலாறு, டாக்டர் சு. சக்திவேல்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், டாக்டர் மு. உலகநாதன்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பாலசுந்தரம்.

மொழியும் எழுத்தும், டாக்டர் செ. வை. சண்முகம்.

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்,
பா. வே. மாணிக்க நாயகர்.

க. ப. சந்தோசம் மொழிபெயர்ப்பு, 1968.

தமிழே முதன் மொழி, இரா. வேங்கடகிருட்டினன்.

சிந்துவெளி நாகரிகம், மா. இராசமாணிக்கனார்.

செந்தமிழ், பொற்கோ
பண்டைத் தமிழ் எழுத்துக்கள், தி. நா. சுப்பிரமணியன்.

சொல்லாய்வுக் கட்டுரைகள் — இரா. மதிவாணன்.

தமிழ் எழுதப் படிக்க எளிய முறை –
டாக்டர் தி. முத்து. கண்ணப்பன், 1984.

## காலந்தோறும் தமிழ் எழுத்துகள் வளர்ச்சி




வெ. சுந்தரம், ‘ கல்சொல்லும் கதைகள் ’

எடுத்தாண்டவர் : வா. செ. குழந்தைசாமி.

காலந்தோறும் தமிழ் எழுத்துகள் வளர்ச்சி




வெ. சுந்தரம், ‘ கல்சொல்லும் கதைகள் ’
எடுத்தாண்டவர் : வா. செ. குழந்தைசாமி.

# எகர ஒகர எழுத்துகளின் வரிவடிவ வளர்ச்சி

[இந்நூலுள் 6–12 பக்கங்களில் காணப்படும் எகர ஒகர எழுத்துகளின் தொடர்புரை]

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (எழு. 15)

எகர ஒகரத் தியற்கையு மற்றே (எழு. 16)

என்ற நூற்பாக்களால் தொல்காப்பியம், மெய்யெழுத்துகளும் உயிர்களில் எகர ஒகரக் குறில்களும் புள்ளிபெறும் எனக் கூறுகின்றது. இதே கருத்தை நன்னூலும் (எழுத்தியல் 98) வீரசோழியமும் (எழு. 3) குறிப்பிடுகின்றன.

இவற்றின்படி, எகர ஒகர உயிர்க்குறில்களேயன்றி கெ கொ ஙெ ஙொ செ சொ ஞெ ஞொ டெ டொ ணெ ணொ தெ தொ நெ நொ முதலிய உயிர்மெய்க் குறில்களும் மேல் புள்ளி பெற்றன. (இவற்றுக் கொம்பின்-கோட்டின் மேல் புள்ளியிட்டுக் கொள்ளவேண்டும்.)

ஒதி, ஓதி; எரி, ஏரி என்பனவற்றின் உயிரெழுத்துகள் புள்ளி பெற்றால் குறில்; புள்ளி பெறாவிடில் நெடில். இதற்கு,

> ''நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீள்மரமாம்
> நீர்நிலையோர் புள்ளிபெற நெருப்பாம்''

என்னும் பழம்பாடலும் சான்றாம். நேரிழையார் (பெண்களின்) கூந்தலுக்கு ஓதி என்பது பெயர். இது ஒதி எனவே எழுதப்பட்டது. புள்ளியிடாது 'ஒதி' என எழுதப்பட்டதால் ஓதி என்பது கூந்தலாயிற்று. புள்ளியிடப்பட்டால் குறிலாகி, 'ஒதி' என்னும் மரப்பெயராயிற்று! இதேபோல், நீர்நிலை ஏரி என்பதாகும். இது எரி எனவே எழுதப்பட்டது. எகரத்தின் மேல் புள்ளியிடப்பட்டதால் குறிலாகி, 'எரி' என்றாகி நெருப்பைக் குறித்தது!

எனினும் ஓலைச்சுவடிகளில் புள்ளியின்றியே எழுதப் பெற்றன. கல்வெட்டுகளில் சிலசமயங்களில் புள்ளியிடப் பெற்றது. தொடக்க காலக் கல்வெட்டுகளில் எகரத்தின் நடுவில் புள்ளியிடப்பட்டது! இம்முறை பத்தாம் நூற்றாண் டிற்குப் பின்பு கல்வெட்டுகளிலும் ஒழிந்தது என்று தி. நா. சுப்பிரமணியன் கூறுகின்றார்.

வீரமாமுனிவர் தமது தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலுள்,

'நீட்டல் சுழித்தல் குறில்மெய்க் கிருபுள்ளி'

என்று நூற்பா இயற்றினார். இதன்படி, எகர ஒகரங்களுக்கு நீண்ட புள்ளி (நீண்ட படுக்கைக்கோடு) யையும் மெய்க்கு சுழித்த புள்ளியையும் இடவேண்டும். எரு, ஒரு; உண், எண் என அமையும். இம்முறையும் மாறியது! இது இவ்வாறிருக்க வீரமா முனிவரே, தமது இலத்தீன் மொழியிலமைந்த 'கொடுந் தமிழ்' என்னும் இலக்கண நூலின் முதல் பகுதியில் 'ெ' என்ற கொம்பை 'ே' என மாற்றியதாக எழுதுகின்றார். இது எளிதாகவும் தெளிவாகவும் அமைந்ததால் எல்லாரும் கைக் கொண்டனர் — புழக்கத்தில் கொண்டனர்.

இதையே, தாண்டவராய முதலியார் இயற்றிய இலக்கண வினாவிடை என்னும் பத்தொன்பதாம் நூற்றாண்டு நூலுள்,

''வேறு பலர் கோடு (கொம்பு) பெற்ற நெடிலுயிர்மெய் களைக் கோடுட் சுழித்து மெழுதுவர். வரலாறு: கொல் — கோல் என வழங்கும்,'' என்று காட்டப் பெறுகிறது. குறில் கொம்பு 'ெ' என்பது நெடிலாக 'ே' எனச் சுழிக்கப்பட்டது.

இவ்வாறு சுழித்தெழுதப் பெற்றது உயிர்மெய் ஏகாரமும் உயிர் ஓகாரமுமே ஆகும். இந்தச் சுழியையும் புள்ளியென்றே வழங்கியுள்ளனர்.

ஆனால் ஏகார, ஓகார உயிர்நெடில் உருமாறியதைப் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவராகிய இராமாநுச

கவிராயர் 1847 ஆம் ஆண்டில் நன்னூலைப் பதிப்பித்தபோது, ஒரு நூற்பாவை மாற்றியதற்கு அவர்தரும் விளக்கம் :—

''தொல்லாசிரியர் முதலாயினோர்,

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'

எனவும்,

'இறந்தது விலக்கல் எதிரது போற்றல்'

எனவும் கூறினமையால், எகர ஒகர மெய் புள்ளிபெறும் என்ற இச்சூத்திரத்தை ஏகாரம் ஓகாரம் மெய் புள்ளிபெறும் எனத் திருப்ப வேண்டிற்று என்னெனின், இக்காலத்தார் ஏகாரம் ஓகாரங்களுக்கே புள்ளியிட்டெழுதுவது பெருவழக்காயின மையா லென்க,'' என்பது. இங்கு, ஏகாரத்தின்கீழ் நீண்ட கோடு இழுக்கப்பட்டதும் ஓகாரத்தின்கீழ் சுழிக்கப்பட்டதும் ஆகியவையே புள்ளி என்றழைக்கப் பெறுகின்றன. என்றாலும், ''பழைய இலக்கண முறைப்படி எகர ஏகார ஒகர ஓகாரங்கள் எ எ ஒ ஒ (குறிலுக்கு மேற்புள்ளியிட்டு) என்று எழுதப்பட வேண்டியவை இக்காலத்து எ ஏ, ஒ ஓ என்று எகர ஒகரங் களின் புள்ளி எடுபட்டு ஏகார ஓகாரங்கள் கீழே நீண்ட புள்ளி யையும் வட்ட புள்ளியையும் பெற்றது எப்போது யாரால் என்பது தெரியவில்லை......நீண்ட புள்ளியை எகர ஒகரக் குற்றெழுத்துக்கு இடவேண்டும் என்றும் சுழித்த புள்ளியை மெய்யெழுத்துக்கிடவேண்டும் என்றும் அமைத்தார் (வீரமா முனிவர்). இதில் நீண்ட புள்ளி, சுழித்த புள்ளி என்பது தவிர மற்றபடி பழைய இலக்கணத்துக்கு மாறுபட்ட தன்று; அவற்றை யொட்டியதே. ஆனால், எகர ஒகரத்துக்கு மேற் புள்ளியை மாற்றி ஏகார ஓகாரத்துக்குக் கீழே நீண்ட கோட் டையும் சுழித்த புள்ளியையும் அமைத்தது யார்? எப்பொழுது? என்பது ஆராயற்பாலது,'' என்று மயிலை சீனி. வேங்கடசாமி எழுதுகின்றார்.

அவரே, ''ஏகார நெட்டெழுத்துக்குக் கீழ்க்கோடு அமைத் தவர் வீரமா முனிவர் என்றும் கூறுவர்'', (Burnell's South Indian Paleography P. 5.) என்றும் எழுதுவர். [1]

வீரமாமுனிவர் எகர ஏகார ஒகர ஓகாரங்களுக்கு இவ்வாறு திருத்தம் கொடுப்பதற்கு, வழிகாட்டியவரும் அவர்க்கு முந்திய தமிழரே என்பது இப்போது வெளிச்சமாகின்றது !

''வீரமா முனிவர் கோவாவில் வந்திறங்கிய ஆண்டு கி.பி. 1710 ஆகும். அதே ஆண்டில் மதுரை நாயக்க மன்னர் வெளியிட்ட செப்பேடு ஒன்றில் 'ஒ', 'ஓ' என ஒகரத்துக்கு மேற்புள்ளியும் ஓகாரத்துக்குக் கீழ்ப்புள்ளியும் (கீழ்ச்சுழியும்) இடப்பட்டிருக்கின்றன என்று திரு நாகசாமி சொல்கின்றார்,'' என்றும்,

''கி. பி. 1708இல் மதுரை மீனாட்சியம்மன் கோயில் மேல்விதானத்தில் வரையப்பட்ட மதுரை நாயக்கர் கால ஓவியத்தின்கீழ் ' கோ ' என்பதற்குள்ள கொம்பு கவிழ்ந்த நிலையில் சுழிக்கப்பட்டுக் ' கொ ' என எழுதப்பட்டுள்ளது,'' என்றும் கல்வெட்டாராய்வாளர் திரு இராசு அவர்கள் குறிப்பிடுகின்றார்.[2]

இதன்படி, வீரமா முனிவர் தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன்பே தமிழர், 'ஓ' எனக் கீழே சுழித்த ஓகாரத்தையும் ' ெ' என இருபுறமும் சுழித்த கொம்பையும் எழுதத்தொடங்கி விட்டனர் என்பதும் இவ்வழக்காற்றினைக் கண்டே வீரமா முனிவர் தாம் புழங்குமாறு செய்ததனைக் ' கொடுந்தமிழ் ' நூலுள் எழுதுகின்றார் என்பதும் புலனாகின்றன.

அடிக்குறிப்பு :—

1. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக்கம் 349–350.

2. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 4—9—90 ஆம் நாளன்று ஆசிரியர் நேரில் உரையாடியபோது அவர் சொன்ன செய்தி.

# உகர ஊகாரத் திருத்தம்

புலவர் செ. இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-5.

தமிழ் எழுத்துச் சீர்மை முயற்சிக்கு இப்போது அறுபது வயதாகிறது! 4—9—1930 'குமரன்' இதழில் முருகப்பா அவர்கள் தமிழ் எழுத்துச் சீர்மை பற்றி முதலில் எழுதினார். 23, 24—12—1933ஆம் ஆண்டு உ. வே. சாமிநாதய்யர் தலைமையில் சென்னையில் நடைபெற்ற தமிழன்பர் மாநாட்டில் எழுத்துச் சீர்மை உடனடியாகச் செய்யவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1934இல் 'பகுத்தறிவு' இதழில் சீர்மை பற்றி அறிக்கை வெளிட்ட தந்தை பெரியார் அவர்கள் 20—1—1935 முதல் 'குடியரசு' இதழில் அவற்றைப் பின்பற்றத் தொடங்கினார். 1948இல் சுதேசமித்திரன் நாளிதழைச் சி. ஆர். சீனிவாசன் அவர்கள் தமிழ் எழுத்துச் சீர்மையுடன் அச்சிட்டார் ... ... ...

தந்தை பெரியாரவர்கள் நூற்றாண்டு விழாவையொட்டி 9—10—1978 முதல் தமிழ் எழுத்துச் சீர்மையைத் தமிழக அரசு அறிவித்தது ... ... ... இத்திருத்த ஆணையால் உயிர் மெய் எழுத்துக்களில் உகர, ஊகார உயிர்மெய் நீங்கலாக அனைத்தெழுத்துக்களும் சீர்மையை அடைந்தன.

பதினெட்டு மெய்களுடன் உகாம் ஊகாரம் சேரும் உயிர் மெய்கள் மட்டும் ஒரே சீர்மையாக இல்லாமல் ஒழுங்கற்று, பல்வேறு முரண்பாடுகளுடன் வடிவங்களைக் கொண்டுள்ளன.

| | |
|---|---|
| கு, டு, மு, ரு, ழு, ளு;<br>ஙு, சு, பு, யு, வு;<br>ஞு, ணு, து, நு, லு, று, னு; | குறில்-3 பிரிவுகள். |
| கூ;<br>டூ, மூ, ரூ, ழூ, ளூ;<br>ஙூ, சூ, பூ, யூ, வூ;<br>ஞூ, ணூ, தூ, நூ, லூ, றூ, னூ; | நெடில்-4 பிரிவுகள். |

இவை 3, 4 பிரிவாக இருந்தாலும் நுட்பமாகப் பார்க்குமிடத்துக் குறிலும், நெடிலும் தனித்தனியே 12 வேறுபாடுகளைப் பெற்றிருக்கின்றன.

ஒருயிர் சேர்ந்த உயிர்மெய்கள் இவ்வாறு ஒரே சீராக இல்லாமல் வேறுபட்டிருப்பது மொழியியலுக்கு முரண்பாடாக உள்ளன. சின்னஞ்சிறு பிஞ்சுக் குழந்தைகள் இவ்வேறுபட்ட வடிவங்களைக் கற்று மனத்தில் இருத்திக்கொள்ள எவ்வளவு சிரமப்படும் என்பதை உளவியல் நோக்கில் எண்ணிப் பார்க்க வேண்டும். முரண்பாடுகள் நிறைந்த இவ் வரிவடிவங்களை அக் குழந்தைகட்குக் கற்றக்கொடுக்கத் தொடக்க வகுப்பு ஆசிரியர்கள் எவ்வளவு சிரமப்படுவார்கள் என்பதைக் கல்வியியல் நோக்கில் காணவேண்டும் … … …

இம் மாறுபட்ட இருவகை உயிர்மெய் வடிவங்களுக்கு மட்டும் தட்டச்சுப் பொறியில் 22 தட்டுக்கள் உள்ளன. அவை களில் சீர்மை மூலம் 20 தட்டுக்கள் குறைந்து இரண்டே தட்டுக்களில் இவ்வடிவங்களைத் தட்டச்சுச் செய்யலாம். பிற சீர்மைகளுடன் இந்த 20 வடிவங்கள் குறைந்தால் கையடக்கமான தட்டச்சு வந்துவிடும் … … …

அச்சகங்களில் ஆங்கில எழுத்துக்கள் 14 கிலோ வாங்கி னால் அதே செய்தியை அச்சடிக்க தமிழ் எழுத்துக்கள் 28 கிலோ தேவைப்படுகிறது. தவிரவும் பழைய முறை எழுத்துக் களில் மேலும் கீழும் வளைவுகள் செல்லுவதால் இடத்தை அடைக்கின்றன. இப்போது 30 வரிகள் அச்சிடும் பக்கத்தில் 36 வரிகள் அச்சிடலாம். அச்சு எழுத்துப் பெட்டிகளில் 34 குறைவதால் கை அதிகம் நீளவேண்டிய தேவையில்லை … …

ு ூ குறியீடுகள் இன்றைய கிரந்த எழுத்துகளில் உள்ளன. தட்டச்சுக்களிலும் அவை இடம் பெற்றுள்ளன. ராஜு, ஜூலை போன்ற சொற்கள் மூலம் அனைவருக்கும் தெரிந்த, அனைவரும் கையாள்கின்ற குறியீடுகளாக இருக்கின்றன……

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை அமைப்பாளராகவும் அமரர் வ. சுப. மாணிக்கம் அவர்களைத் தலைவராகவும் கொண்ட தமிழகப் புலவர்குழு தமிழ் எழுத்துச் சீர்மை அவசியம் தேவை எனத் தீர்மானம் நிறைவேற்றி 2—2—1975இல் பரிந்துரை செய்யக் குழு ஒன்றையும் அமைத்தது. அக்குழு உகர ஊகாரத் திருத்தம் அவசியம் தேவை எனக் கூறியுள்ளது … … …

மொழிப்பற்று என்ற பெயரில் மொழி முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கக் கூடாது ... ... ...

வேகமாக முன்னேறி வரும் மொழிகளோடு நம் தொன்மைத் தமிழும் ஈடுகொடுத்து முன்னேறத் தேவை எழுத்துச் சீர்மை ! எஞ்சிய உகர, ஊகாரச் சீர்மை அவசியம் உடனடியாக வேண்டும் ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

15—7—90 அன்று; விழுப்புரம் திருக்குறள் பேரவை.

---

பதிப்பாசிரியர் தரும் செய்தி

## கருவூரார் பல திரட்டு

(சித்த வைத்திய நூல்)

பதிப்பாசிரியர் :

இரா. நிர்மலா தேவி

### பதிப்பாசிரியர் முகவுரை

இச்சுவடி நூல் பார்வதி அம்மையாரால் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு அளிக்கப்பெற்றது.

எழுத்தமைதி :

மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியின்றியும், ெ-ே, ா-ர என்பவற்றுக்கிடையில் உள்ள வேறுபாடு காட்டப்படாது, 'ெ', 'ா' என்றே எழுதப்பட்டுள்ளன. இரட்டித்த வல்லின மெய்கள் அதாவது க்க, த்த, ட்ட, ப்ப போன்றவை கூட்டெழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. இரட்டித்த எழுத்துகளை இவ்வாறு எழுதுமுறைகள் சிற்சில இடங்களில் மட்டுமே மேற்கொள்ளப் பட்டுள்ளன. இகரம் ஏறிவரும் இரட்டித்த மெய்களும் இதே முறையில் எழுதப்பட்டுள்ளன.''

– பக்கம் X.

# பிழை திருத்தம்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 2 | அந்ந | அந்த |
| 7 | மொழிய | மொழிப |
| 11 | ஏகாரம், ஓகாரம் (நன்னூல் சூத்திரத்துள்) | எகரம், ஒகரம் |
| 15 | ஞே–ணோ | ஞெ–ணொ |
| 15 | பதினொன்று | ஏழு |
| 18 | தனிததனியே | தனித்தனியே |
| 23 | எழுத்துக்களை தட்டச்சு செய்ய | எழுத்துக்களைத் தட்டச்சு செய்ய |
| 24 | தெளியும் | தெளிவும் |
| 29 | லேல் புள்ளியும் | மேல் புள்ளியும் |
| 31 | எழுத்துகளை கொள்வோம் | எழுத்துகளை அப்படியே கொள்வோம் |
| 34 | கொள்ளுகல் | கொள்ளுதல் |
| 35 | வரிவடிவத:திருத்தம் | வரிவடிவத் திருத்தம் |
| 38 | உயிரெமுத்துகள் | உயிரெழுத்துகள் |
| 41 | வரியெஅத்துகள் | வரியெழுத்துகள் |

## ஓர் அன்பரின் பாராட்டுரை

பேரன்புடையீர்,

தங்களது சிறந்த பணிக்கு எனது நன்றிகள். உலகத் தமிழர் மாநாடு ஆறாவது ஆராய்ச்சி மாமன்றத்தில் கலந்து கொள்ளும் பேறு பெற்றேன். இலக்கியச் சோலைக்குள் புகுந்து வந்து புத்தொளி பெற்றது ஓர் இனிய அனுபவமே. பேருரை இலக்கிய நய ஓசையுடன் கூடிய மரபு தழுவிய பண்டைய தமிழின் பெருமை இன்றைய தமிழின் இன்சுவை இவைகளைப் பருகும் பாக்கியம் ஓர் இனிய கனவே.

திரு கோடப்பிள்ளை (இந்தியா) 18-11-87 அன்று காலை சுமார் 11-30 மணியளவில் நிகழ்த்திய விவாதமும், கருத்தும் ''தமிழ் எழுத்தமைப்பு'' என்ற தலைப்பில் பேசிய சீரிய பேச்சும் பல பிரச்சனைகளையும், விவாதத்தையும் உண்டாக்கியது. நடந்த ஏனைய நிகழ்ச்சிகளிலும், இதுதான் சிந்தனைச் சுடரைத் தூண்டி சலசலப்பை ஏற்படுத்திச் சூடான விவாதத்திற்கும், காரசாரமான தர்க்கத்திற்கும், சர்ச்சைக்கும் உட்பட்டது என்றால் மிகையாகாது

நமது தித்திக்கும் தேன்மொழி இன்று பயிலக் கடினமான மொழியாகக் கருதப்படுகிறது. இயந்திர வேகங்களுக்கு நடுவில் மனிதனும் இயந்திர கதியில் துரிதமாக முன்னேறும் காலம் இது.....எங்கும் எதிலும் வேகம் வேகம்.

இந்த வேகத்தின் தாகத்தைத் தீர்க்கும் வகையில் நமது மொழியின் எழுத்தை எளிமையாக வடிவமைக்கும் காலக் கட்டத்தினுள் நாம் இருக்கிறோம். வரிவடிவம் இடர்ப்பாடாயின்றிக் கூடுமானவரை இன்றைய சின்னஞ்சிறு சிறார்களும் பயிலும் வகையில் இருக்கவேண்டும். நமது சந்ததியார் மட்டுமன்றி வேற்று இனத்தவரும், பிற மொழியினரும் நம் இனிய தமிழைக் கற்கச் செய்யவேண்டும்.........

இப்படிக்கு<br>
பணிவன்புடன்<br>
(ஒப்பம்) கே. சரளாதேவி<br>
1—2—88<br>
சென்னை.

அச்சிட்டோர்: ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி-2. போன்: 25416